822

REGISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்
# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

செப்டம்பர் 1957.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
3 AUG 1957


| விஷயம். | பக்கம். |
|---|---|
| மரணத்திற்குப்பின் மனித ஜீவியம் ... ... | 1 |
| தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள் (ரஹ்மத் பாகவி) .... .... .... .... .... | |
| மூட்டை சுமந்த குடியரசு தலைவர் (எஸ். எம். முஹம்மது முஸ்தபா) ... ... | 13 |
| வெற்றி தரும் மாதம் (மாஸ்டர் கமால் பாபு) ... | 15 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... | 19 |
| முகலாய பெண் மணிகள் சரிதை (டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) .... | 27 |
| ...லா துணைவர் (... பூண்டி பி. டி. ஷாஹுல் ஹமீது) ... | 32 |


... இஸ்லாம் ஆபீஸ் :
... ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்.


சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1-50 |
| தனிப் பிரதி நயா பைஸா. | | 13 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2-00 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.



# இஸ்வத்து நாச்சியுடைய கிஸ்ஸா

இது ஷாம் தேசத்திலிருந்த லாபிறென்னும் ஆலிமுடைய மகள் இஸ்வத்து நாச்சியாரின் சரிதையாகும். இதில் இஸ்வத்து நாச்சியாருக்கும் ஹபீபென்னும் ஒரு பணக்கார வியாபாரிக்கும் நடந்த நிக்காஹும், ஹபீபென்பவர் வெளியூர் சென்றிருக்கும்போது அவருடைய தம்பி இஸ்வத்து நாச்சியாரைக் கெடுக்க முயற்சித்ததும், இஸ்வத்து நாச்சியார் தன் கற்பை காப்பாற்றுவதில் பட்ட கஷ்டங்களும், பின் தான் ஆண் உருவ மேற்கொண்டு செய்த நற் செயல்களும், கடைசியில் தனது கணவரைச் சேர்ந்ததும் மிகவும் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன. இதை ஒவ்வொரு முஸ்லிமும், பெண்கள் குறிப்பாகவும் படித்தறிய வேண்டியது அவசியம்.

இதன் விலை ந. பை. 0-64

கிடைக்குமிடம் :—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.**

கெ. 20 ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

# பத்ஹுல் இஸ்லாம்

செப்டம்பர்—1957.


## மரணத்திற்குப் பின் மனித ஜீவியம்

"அல்ஹயாத்து பஃதல் மவுத்தி"

"எவன் வசம் உலக ஆட்சி இருக்கின்றதோ அவன் மகா மேன்மையானவன்; மேலும் அவன் சகல விஷயங்கள் மீதும் மகா சக்தியுடையவன்; மேலும் அவன் உங்களில் யார் நல்ல னுஷ்டானத்தால் சிறந்திருக்கிறுர் என்று சோதித்தறிவதற்காக மவுத் (என்னும் மரணத்)தையும் 'ஹயாத்' (என்னும் ஜீவிய)த்தையும் சிருஷ்டித்தான்". (குர்ஆன், ஸூரா முல்க்; ஆயத்து 1)

பிறவி எடுத்த ஜீவன் ஒவ்வொன்றும் மரித்தே ஆகவேண்டும்: "குல்லு நப்ஸுன் தாயிகத்துல் மவுத்து" என்ற திருமறைத் திருமொழியின் கருத்தும் இதுவே. "குல்லு மன் அலைஹா பான்" (உலகின் மீதுள்ள அனைத்தும் அழிந்து போகவேண்டியவையே) என்பதன் கருத்தும் இதுவே யாகும்.

உலக வாழ்வில் ஒரு விஷயம் மட்டும் நிச்சயம். அது நிச்சயமாய், கட்டாயமாய், நிர்ப்பந்தமாய் நிகழ்ந்தே தீரும். அதை தட்டிக் கழிக்க எவராலும், எந்த ஜீவனாலும் இயலாது. அது எப்போது நிகழும், எந்த இடத்தில் நிகழும் என்பதும் யாருக்கும் தெரியாது. ஆனல் அதன் நிகழ்ச்சி மட்டும் நிச்சயம், "யக்கீன்" என்று மட்டும் எல்லோர்க்கும் தெரியும். அந்த யக்கீனன விஷயம் என்ன? மவுத்து என்னும் மரணம்தான் அது.

ஒவ்வொரு ஜீவஜந்துவைப் போல், மனிதனும் இரண்டு விஷயங்களால் பந்தப்படுத்தப்பட்டிருக்கின்ருன். ஒன்று ஜீவியம் என்னும் ஹயாத்து; மற்ருென்று மரணம் என்னும் மவுத்து. மவுத்தும் ஹயாத்

தும் நெருங்கிய சம்பந்தமுடையவை; அவை ஒன்றைவிட்டு ஒன்று ஒதுங்கித் தூரமாய் காணப்பட்டபோதிலும் சரி, அந்தரங்கத்தில் அவை இரண்டும் தொடர்புடையவையே யாகும்.

எனவே 'ஹயாத்' உள்ளதெல்லாம் 'மவுத்' ஆகியே தீரும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இக்கட்டுரைத் தலைப்பிலுள்ள ஆயத்தில், 'மவுத்' என்னும் பதம் முதலாவதாகவும், 'ஹயாத்' என்னும் பதம் இரண்டாவதாகவும் கூறப்பட்டிருக்கிறது. அதாவது எல்லாம் வல்ல அல்லாஹு தஆலா, முதலில் ஹயாத்தையும் பிறகு மவுத்தையும் படைத்தான் என்று விளங்குகிறது. அதாவது, மனிதனானவன் உலகத்தில் சதாகாலமும் ஜீவித்துக் கொண்டே இருப்பதற்காக படைக்கப்பட வில்லை; சொற்ப காலம் உலகில் அவன் ஜீவித்திருந்து விட்டுப் பிறகு, மவுத்தாகி விடவேண்டு மென்றே படைக்கப்பட்டிருக்கிறான் என்பது ஸ்பஷ்டமான விஷயமாகும்.

'மனிதன் செத்துப் போவதற்காகவே படைக்கப்பட்டிருக்கிறான்' என்றால், அல்லாஹு தஆலா, அவனை படைத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்று சிலர் ஒரு கேள்வி கேட்கலாம். இதற்கும் அல்லாஹு தஆலா அதே ஆயத்தில் பதில் கூறியுள்ளான். அதாவது "ஏ மாந்தராகிய எனது அடியார்களே, உங்களில் யார், நல்லொழுக்க நற்செய்கைகளினால் அழகானவராய் உத்தமராய் விளங்குகின்றனர் என்பதை, பரீக்ஷித்துப் பார்ப்பதற்காகவே, இறைவனாகிய யான் உங்களுடைய ஜீவியத்தையும் மரணத்தையும் சிருஷ்டித்தேன்" என்ற கருத்தை அல்லாஹு தஆலா விளக்கியுள்ளான்.

மவுத்து என்னும் மரணமும் ஹயாத் என்னும் ஜீவியமும் மனிதனோடு சம்பந்த முடைய இரு எல்லைக் கோடுகளாகும். இது ஒரு கோட்டின் முனை; அது ஒரு கோட்டின் முனை. ஒரு கோடியிலிருந்து வந்தவர் இன்னொரு கோடிக்குப் போய்த்தான் ஆகவேண்டும். உள்ளே வந்தவர் வெளியே போய்தான் ஆகவேண்டும். அதாவது பிறந்தோரெல்லோரும் இறந்தேயாக வேண்டும். ஒவ்வொரு ஆத்மாவும், மரணம் என்னும் பானத்தைப் பருகியே ஆகவேண்டும்.

மனிதனுடைய 'ரூஹ்' அல்லது ஆத்மா என்னும் எஜமானனவன், துன்யா என்னும் இந்த உலகத்தின் இந்தக் கரையிலிருந்து ஆகிரத்து என்னும் அந்தக் கரைக்குப் போய்ச் சேர்வதற்கு, ஸ்தூல தேகம் என்னும் இந்த [illegible] ஒரு கப்பலாக (படகாக)

உபயோகிக்க வேண்டியவனாக இருக்கின்றான். நதியைக் கடந்து செல்வதற்கு, ஒருவனுக்கு மரக்கல மென்னும் தோணி எத்துணைமட்டும் பிரயோஜனப்படுமோ அம்மட்டுமேதான், ஆத்மாவுக்கு இந்த சரீரம் பிரயோஜனப்படுகிறது.

இந்த சரீரம் ஒரு ஓட்டைப்படகு; வாழ்க்கை என்னும் புயலில்—கொந்தளிக்கும் கடலில் அகப்பட்டுக் கொண்ட 'ரூஹ்' என்னும் ஒருவனுக்கு, அக்கரை போய் க்ஷேமமாய் சேர்வதற்கு மட்டும்தான் இந்த ஓட்டைப் படகு தேவை; ஆகிரத்து என்னும் அக்கரைக்குப் போய்ச் சேர்ந்துவிட்ட பிறகு, இந்த ஓட்டைப் படகு என்னத்திற்கு? இது ஒன்றுக்கும் உதவாததாய் போய் விடுகிறது. எனவே, மாந்தன் இந்த சரீரத்தை சொற்ப காலத்துக்கு மட்டும், தம்முடைய ஆத்மார்த்த இலக்ஷியம் ஈடேறுவதற்காக மட்டும், உப கருவியாக உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டுமே யல்லாது, இந்த சரீரம் என்னும் ஓட்டைப் படகிலேயே நாம் சதா சர்வ காலம் இன்புற்றுக் கொண்டிருப்போம் என்று நினைத்திருத்தல் கூடாது.

ஓட்டைப் படகில் அமர்ந்து இக்கரையிலிருந்து அக்கரை போய் சேர்வதற்கு ஒரு சொற்ப காலம் செல்லும். அந்த சொற்ப காலம் அவனவனது விதிவசத்துக் கேற்ப குறுகலாகவோ, விரிவாகவோ அமைகிறது. ஒருவனுக்கு இக்கரையிலிருந்து அக்கரை போய்ச் சேர ஒருநாளும் ஆகலாம், ஓராண்டும் ஆகலாம், ஐம்பது ஆண்டுகளும் ஆகலாம், நூறாண்டுகளும் செல்லலாம். எத்தனை நாட்கள் எத்தனை காலம் நீடிக்கிறதோ அத்தனை காலமும், அக்கரை போய்ச் சேர வேண்டிய ஆத்மா என்னும் ரூஹூக்கு, ஒருவகைத் துன்பமும் தொந்தரவும் சோதனையுமே யாகும்.

ஆத்மாவானது சரீரப் படகில் அமர்ந்து தொல்லுலகு என்னும் இந்த சோதனை சமுத்திரத்தைக் கடந்து செல்லுங்கால், அந்த ஆத்மா சில கடமைகளை நிறைவேற்ற வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்த சொற்ப காலத்தில் எந்த ஆத்மா நேர்மையாக நடந்து கொள்கிறது, எந்த ஆத்மா ஒழுங்கீனமாக நடந்து கொள்கிறது என்று, அந்த ஆத்மாவுக்கு அதிகாரியான ஆண்டவன் கவனித்த வண்ணம் சோதித்துப் பார்த்துக் கொண்டே இருக்கின்றான்.

"உங்களில் யார் நல் அமல் புரிவதால் அழகானவராய் இருக்கின்றார் என்பதை சோதித் தறிவதற்காகவே, ஆண்டவன் மரணத்தையும்

ஜீவியத்தையும் படைத்திருக்கின்றான்'' என்று குர்ஆன் திருவசனம் வற்புறுத்துகின்றது.

'ஹயாத்' என்னும் ஜீவியத்தைப்பற்றி இங்கு சற்று விளக்கமாய் ஆராய்ந்து பார்ப்போம்:– ஹயாத் என்னும் ஜீவிய நிலைக்கு எப்போதும் எந்நிலையிலும் அழிவு (பனா) என்பதே இல்லை. ஜீவியம் என்னும் இந்த ஹயாத், புதிதாக உற்பத்தியானதில்லை. அது ஆதி அனாதி காலந்தொட்டே இருந்து வருகிறது. அதுதான் ரூஹ். "ஆலமே மீதாக்'' என்னும் ஆதி காலத்திலும் அது இருந்தது. "ஆலமே அஜ்ஸாம்'' என்னும் இந்த ஸ்தூல (உலக வாழ்வு) காலத்திலும் இருக்கிறது. "ஆலமே அர்வாஹ்'' என்றும் மரணத்துக்குப் பின்னைய காலத்திலும் அது இருக்கும். அதாவது மரணத்துக்குப் பின், கப்ருடைய காலமாகிய 'பர்ஸக்' கிலும் ஆத்மா சுக-துக்கம் அனுபவித்துக் கொண்டிருக்கும். கியாமத்து நாள் நிகழ்ந்து, நன்மை-தீமை என்னும் 'அமல்' கள் நிலை நிறுத்தப்பட்டு, இறைவனால் நியாயம் வழங்கப்படும் பரமலோக சம்பந்தத்துக்குப் பிறகும், நரகத்திலோ சுவர்க்கத்திலோ, அதன் பலாபலத்துக்கேற்ப, அந்த ரூஹ் என்னும் ஆத்மா தனக்குரிய 'தேஹத்' துடன் சுவர்க்கானந்தமோ, நரகத் துன்பமோ அடைந்து கொண்டுதான இருக்கும். எனவே ஆத்மா வென்னும் ரூஹுக்கு அழிவு (பனா) என்பதே கிடையாது, சரீரந்தான் பனாவாகும், ஆத்மாவுக்கு எப்போதும் ஜீவியம் உண்டு.

(1) அல்ஹயாத்து கப்லல் விலாதத்தி.
(2) அல்ஹயாத்து கப்லல் மவுத்தி.
(3) அல்ஹயாத்து பஃதல் மவுத்தி.

என்று ஆத்மார்த்திகள், மனிதனுக் குரித்தான ஹயாத் என்னும் ஜீவியத்தை மூன்று நிலைகளாய்ப் பிரித்திருக்கிறார்கள். அதாவது: (1) இவ்வுலகில் பிறப்பதற்கு முன், மனிதன் தாய் வயிற்றில் உற்பத்தியாவதற்கு முன்னை நிலையிலிருந்த ஜீவியம் ஒன்று. (2) மரிப்பதற்குமுன், அதாவது தாய் வயிற்றில் உற்பத்தியாகிப் பிறந்து உலக ஆசாபாசங்களில் மூழ்கி துன்யாவில் தொல்லை வாழ்வு வாழ்ந்து வருகிற ஜீவியம் மற்றொன்று. (3) உலக வாழ்வைத் துறந்து அதாவது, அழிந்து மண்ணோடு மண்ணாகிப் பனாவாகிப் போகும் இந்த ஸ்தூல சரீரத்தை விட்டு, ஆத்மாவானது மவுத்தாகி அந்தப் பரமலோக வாழ்வில் லயித்து விடும் ஜீவியம் பிரிதொன்று.

முதலாவது ஜீவிய நிலையும், மூன்றாவது ஜீவிய நிலையும் மர்ம மானவை. அதன் அறிவாற்றல், அல்லாஹ்வாகிய நம் எஜமானுக்கு மட்டும் உண்டு. நாம், அவன் அறிவித்துக் கொடுத்த அளவுக்கு மட்டும்தான் தெரிந்து கொண்டிருக்கிறோம். எனவே, தாய் வயிற்றில் சிசுவாக நாம் உற்பத்தியாவதற்குமுன் என்ன விதத்தில் ஜீவித்துக் கொண்டிருந்தோம் என்பது நமக்குத் தெரியாது. இதேமாதிரி மரணித்துப் போன பிறகு, நம்முடைய ஆத்மார்த்த ஜீவியம் எப்படி இருக்கும் என்பதும் இப்போது நமக்குத் தெரியாது. ஆனால், இவ் வுலக வாழ்வாகிய இரண்டாவது ஜீவிய நிலையில், நாம் நல் அமல் புரிந்து புண்ணியங்கள் சம்பாதித்துக் கொள்வோமாயின், அந்த மூன்றாவது ஜீவிய நிலையில் (ஆகிரத்தில்) நாம் கதி மோக்ஷம் பெற்று, இறைவனுடைய திருச் சன்னிதானத்தில் சுவர்க்க பாக்கியம் என்னும் பேரருள் பெற்று சுகித்துக் கொண்டு இருப்போம் என்று நமக்கு போதிக்கப்பட்டிருப்பதால், அதன் மீது நம்பிக்கை வைத்துக் கொண் டிருக்கிறோம். (வல்லாஹுஃ அஃலம்-நம் அறிவுக்கு அப்பால் பட்டதை ஆண்டவனே நன்கறிவான்.)

'மரணத்திற்குப் பிறகு மனித ஜீவியம்' உண்டு என்பதைப்பற்றி நாம் ஈமான் கொண்டுள்ளோம். "ஆமன்து பில்லாஹி..." என்னுள்ள ஈமானே முபஸ்ஸலின் இறுதியில் "வல்பஃதி பஃதல் மவுத்தி" அதா வது "மரணத்திற்குப் பிறகு (மீண்டும்) உயிர்ப்பெற் றெழுவோம்" என்று ஈமான் கொள்ள வேண்டியது ஒரு ஷர்த்தாகும்.

"செத்துப்போய் சரீரத்தை மண்ணில் புதைத்து விட்ட பின்னர் மனிதன் மீண்டும் புது உயிர்பெற்று எழுகின்றான்" என்று சொன் னால், நவீன நாகரிகக் கலை பயின்று, இயற்கை வாதம் பேசும் 'சைன்டிபிக்' மனிதர்கள் சிரித்து நகைக்கலாம். ஆம், அவர்கள் கண்ணால் கண்டதை, காண்பதை மட்டும்தான் நம்புவார்கள்; அல்லது அவர்கள் படிக்கும் ஆங்கிலேயரின் நூல்களில் எழுதப்பட்டிருப்பதை மட்டும் தான் நம்புவார்கள். மற்றதெல்லாம் அவர்கட்கு வேடிக்கை யாகவே இருக்கும்.

'மனிதன் ஒருமுறை செத்துப் போன பின் புத்துயிர் பெற்று புது ஹயாத்துடன் ஜீவிக்க மாட்டான்' என்று சொல்பவர்களை நோக்கி "சோதரீர்! தாங்கள் தாயார் வயிற்றில் சிசுவாய் உருப்பெறுவதற்கு முன் எத்தகைய ஜீவியம் பெற்றிருந்தீர்கள் தெரியுமா?" என்று கேட் டால், "தெரியாது" என்றுகூட சொல்ல மாட்டார்கள். அதனை

மறுத்து அகந்தையோடு இயற்கை வாதம் பேசுவார்கள். அதாவது "அப்பாவுடைய விந்துவும் அம்மாவுடைய நாதமும் கலந்ததால் நான் உற்பத்தியானேன், அப்படியே ஆயுள் முடிந்தால் இறந்து போவேன், அதன்பின் எதற்காக ஜீவிக்க வேண்டும், அந்த உலகம் எங்கே இருக்கிறது? அமெரிக்காவிலா, ஆப்ரிக்காவிலா, செவ்வாய் கிரகத்திலா, சந்திர கோளத்திலா?" என்றெல்லாம் விதண்டாவாதம் பேசுவார்கள்.

கப்பலில், நடு சமுத்திரத்தில் நாம் போய்க் கொண்டிருக்கும் போது, நமக்கு முன்னால் என்ன இருக்கிறது, நமக்குப் பின்னால் என்ன இருக்கிற தென்று கண்டறிய முடிகிறதா? ஆகாயத்தில் விமானத்தில் பறந்துபோய் முன்னால் என்ன இருக்கிறது, பின்னால் என்ன இருக்கிற தென்று கண் கொண்டு பார்க்க முடிகிறதா? இல்லை! ஆனால் கப்ப லோட்டும் 'கப்பித்தானும்' விமானம் ஓட்டும் 'பய்லெட்டும்' "அதோ அமெரிக்கா தெரிகிறது, அதோ பாக்கிஸ்தான் தெரிகிறது" என்று சொன்னால் நம்பித்தானே ஆகவேண்டி யிருக்கிறது.

இதேமாதிரிதான், நம் ஞான ஆசிரியர்ப் பெரியோர்கள், திருக் குர்ஆன் ஆதாரங் கொண்டும் திருநபிச் சொல் ஹதீதாதாரங் கொண் டும் "நாம் பிறப்பதற்குமுன் ஆலமே மீதாக்கில் இருந்தோம்" என்றும் "மரித்த பிறகு ஆலமே அர்வாஹில்-ஆகிரத்தில் ஜீவிப்போம்" என்று சொல்லுங்கால் அதை நம்பி ஈமான் கொண்டு, ஆண்டவனுக்குப் பயந்து, நல் அமல் புரிந்து நல்லொழுக்கஸ்தராய் நடந்து கொள்ளத் தான் வேண்டும். இதுதான் இஸ்லாமிய போதனை; நம் முஸ்லிம்களின் சம்பிரதாயம்.

மவுத்துக்கும் கியாமத்துக்கு மிடையில், ஆண்டவனுடைய கற்பனைப் பிரகாரம், ஒரு குறிப்பிட்ட காலம், மரித்துப் போனவர் களின் ஆத்மாக்கள் சஞ்சரித்துக் கொண்டு நிலைத்திருக்கின்றன வல்லவா? அதற்குப் பெயர் 'ஆலமே பர்ஸக்' என்று நம் இஸ்லாம் கூறு கிறது. அதுதான் ஆகிரத்துக்கு ஆத்மாக்கள் போய் ஆகவேண்டிய பாதையில் முதல் ஸ்தானமாய் தங்கியிருக்கும் ஜீவிய நிலை. மவுத்துக் குப் பிறகு கப்ரில் இது ஆரம்பமாகும்; ஆகிரத்தில்-மஹ்ஷர் மைதானில் இது முடிவுறும். அதன்பின், அவரவர் பலாபலனுக் கேற்ப நரகத் துன்பமோ, சுவர்க்க சுகமோ கிடைக்கும். அத்துடன் அல்லாஹ் வுடைய பேரருள் பாக்கியமும் கிடைத்து, அழிவற்ற ஆத்மா, அழி விலா அமர வாழ்வில் லயித்திருக்கும். வஸ்ஸலாம்.

# தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

(((ரஹ்மத் பாகவி)))

( 2 )

## 'ஸஜ்தா ஸஹ்வு' பற்றிய ஹதீதுகள்

அபூ ஹுரைரா (ரலி) அறிவிப்பது: நபிகள் நாயகம் ரஸூ லுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:—

*"நிச்சயமாக உங்களி லொருவர், தொழுதுக் கொள்வதற்கு எழுந்து நிற்பாரானல், அப்போது அவரிடம் ஷைத்தான் வந்து, சந்தேகங்களை உண்டு பண்ணி விடுகிறான். எனவே, அந்தத் தொழுகைக்காரர், 'நாம் எத்தனை ரக்கஅத்து தொழுதோம்' என்று நிச்சயமாய் அறியாதவராகி விடுகிறார். உங்களி லொருவர்க்கு இங்ஙனம் (ஷைத்தானுடைய சேஷ்டை) ஏற்படுமாயின், அன்னவர், உட்கார்ந்த நிலையிலேயே இரண்டு ஸஜ்தாக்கள் செய்வாராக.

ஆகவே, தொழுதுக் கொண்டிருக்கும் போது இடையில் யாருக்கேனும் சந்தேகம் ஏற்பட்டால், அதாவது நாம் மூன்று ரக்கஅத்துதான் தொழுதோமா, அல்லது நான்கு ரக்கஅத் தொழுதோமா என்று சமுசயம் ஏற்பட்டால், முதலில் அந்த சந்தேகத்தை தீர்த்துக் கொள்ள வேண்டும்; எத்தனை ரக்கஅத் தொழுதோம் என்பதில் அவருக்கு நிச்சயம் (யக்கீன்) ஏற்படுகிறதோ அதன் மீது நிலைத்திருந்து, தொழுகையை முடித்து, ஸலாம் (சொல்லித்) திரும்புவதற்கு முன்னால் இரண்டு ஸஜ்தாக்கள் (ஸஹ்வுக்காக) செய்வாராக.

† நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:— ஒருவன் தொழுதுக் கொள்ளத் தொடங்குவானனல், அப்போது ஷைத்தான் வந்து சேருகிறான். தொழுகைக் காரனை, மறதிக்காளாக்கி குழப்புகிறான். எனவே அவன் சிந்தனைக் கடலில் மூழ்கி விடுகிறான் + நாம் தொழுதது எத்தனை ரக்கஅத்து என்பது அவனுக்குப் புலப்படமாட்டாது. இப்படிப்பட்ட நிலைமையில், குறைவான எண்ணிக்கை மீது நிச்சயம் கொள்ள வேண்டும்

---

* முஸ்லிம்

† ஸஹீஹைன், மிஷ்காத்

+ முஸ்லிம், மிஷ்காத்

அதாவது இரண்டா — மூன்ரு என்று சந்தேகம் ஏற்பட்டால், அது இரண்டு என்றே நிச்சயம் கொண்டு தொழுகையை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறே மூன்ரு—நான்கா என்று சந்தேகம் ஏற்பட்டால் மூன்றைக் கொண்டே நிச்சயம் கொண்டு, இன்னெரு ரக்கஅத்தை தொழுதுச் சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொண்டு, அத்துடன் இறுதி அத்தஹிய்யாத்தும் தரூதும் ஓதி, ஸஹ்வு (மறதி)யுடைய இரண்டு ஸஜ்தாக்களை செய்து, அதைக்கொண்டு ஸலாம் (சொல்லித்) திரும்ப வேண்டும்.

‖ ஸலாம் கொடுத்த பிறகும் ஸஜ்தா ஸஹ்வு செய்யலாம் என்று அநேக ஸஹீஹான ஹதீகள் வந்துள்ளன.

ஸலாம் கொடுத்த பிறகும், ஸஜ்தா ஸஹ்வு செய்த பிறகும், அத்தஹிய்யாத் ஓதுவது பற்றி வந்துள்ள ஹதீது அத்துணை பலமுள்ள (களீய்) ஹதீதாக மாட்டாது. ஆயினும் யாரேனுமொருவர் இந்த ஹதீதின் பிரகாரமும் அமல் செய்து கொண்டால் அதனாலொன்றும் குற்றமில்லை. (தொழுகை நிறைவேறும்.)

† தொழுகையைத் தனியாக இருந்துத் தொழுதாலும் சரி, இமாமாக இருந்துத் தொழவைத்தாலும் சரி, ஏதேனுமொரு அம்சத்தை (விஷயத்தை) மறந்து விட்டால், ஸஹ்வுக்காக (இறுதியில்) இரண்டு ஸஜ்தா செய்ய வேண்டும்.

‡ இமாம் ஸாஹிப் தன்னுடைய தொழுகையில் ஏதேனும் மறந்து விட்டால், ஸஹ்வுக்காக (இறுதியில்) இரண்டு ஸஜ்தா செய்ய வேண்டும்; முக்ததீயும் இமாமுடன் சேர்ந்து அந்த இரண்டு ஸஜ்தாவை செய்ய வேண்டும். இதற்கு மாருய், ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுகும் முக்ததீ, தானே ஏதேனும் மறந்து விட்டால் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டியது அந்த முக்ததீ மீது வாஜிப் (கடமை) இல்லை. ஆனல், இமாம் ஸாஹிப், தம்முடைய தொழுகையில் எதையேனும் மறந்து விட்டால், முக்ததீ "ஸுப்ஹானல்லாஹ்" என்று சொல்லி, இமாமுக்கு ஞாபகப் படுத்த வேண்டும்.

= இமாம், முதல் கஃதா (இருப்பில்) உட்காராமல் நேரே எழுந்து நின்று விட்டால், முக்ததீயும் அவருடன் எழுந்து நின்று விடவேண்டும். பிறகு கடைசி ரக்கஅத்து முடித்து ஸலாம் சொல்வதற்கு முன்னல், இமாம் உட்கார்ந்த வண்ணம் இரண்டு ஸஜ்தாக்கள் செய்ய வேண்டும்; முக்ததீயும் அவருடன் சேர்ந்து அப்படியே அமல் செய்ய வேண்டும்.

---

‖ திர்மிதி, மிஷ்காத்

†, ‡ புஹாரி மராம்

= ஸஹீஹைன், மிஷ்காத்

↑ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு அநேக விடுத்தம் தொழுகையில் ஸஹ்வு (மறதி) ஏற்பட்டிருக்கிறது: ஒரு முறை, லுஹர் அல்லது அஸருடைய தொழுகையில், நாயகம் (ஸல்) அவர்கள், இரண்டு ரக்கஅத்து தொழுது விட்டு ஸலாம் கொடுத்து (திரும்பி) விட்டார்கள். அப்போது ஒரு ஸஹாபி ஞாபகப் படுத்தவே, நாயகம் (ஸல்) அவர்கள் ஸலாம் கொடுத்த பின் (உடனே) ஸஹ்வுடைய இரண்டு ஸஜ்தாக்களை † செய்தார்கள். மேலும் "(ஜனங்களைநோக்கி) நானும் உங்களைப் போன்ற மனிதன் தான்; நீங்கள் மறந்து விடுவதைப் போல் நானும் தான் மறந்து விடுகிறேன். ஆகவே எனக்கு ஏதேனும் மறதி ஏற்படும் போது, நீங்கள் அதை எனக்கு ஞாபகப்படுத்த வேண்டும்" என்று திருவுளமானார்கள்.

÷ ஒரு முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் லுஹர் தொழுகை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது மத்திய கஃதாவை (இருப்பை) மறந்து விட்டுவிட்டார்கள். பிறகு கடைசி கஃதாவில் அத்தஹிய்யாத்தும் தரூதும் ஓதி, ஸலாம் கொடுத்தார்கள்.

* இதை யொட்டி, நாயகம்(ஸல்)அவர்கள் திருவுளமானதாவது:- யாரேனும் தொழுகையில், இரண்டு ரக்கஅத்துகளை நிறைவேற்றியதும் மத்திய கஃதா (இருப்பை) மறந்து எழுந்து விட்டால்—அப்படி எழுந்து நேரே நிற்பதற்கு முன்னடியாகவே ஞாபகம் வந்துவிட்டால்— உடனே அப்படியே உட்கார்ந்து விடவேண்டும். இல்லாவிட்டால், மீதித் தொழுகையை முடித்து, கடைசியில் ஸஹ்வுக்காக இரண்டு ஸஜ்தாக்கள் செய்யவேண்டும்.

‡ ஒரு முறை நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அஸருடைய தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள்; மூன்று ரக்கஆத்துகள் மட்டும் தொழுதுவிட்டு ஸலாம் (செய்து) திரும்பி விட்டார்கள். பிறகு எழுந்து தங்கள் ஹூஜ்ரா (வீட்டு அறைக்குப்) போய்விட்டார்கள். அப்போது ஒரு ஸஹாபி, வீட்டுக்குப் போய், நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதைப்பற்றி ஞாபகம் ஊட்டினர். எனவே நபி (ஸல்) அவர்கள், அந்த க்ஷணமே (புறப்பட்டு) மஸ்ஜிதுக்கு வந்து, சில ஜனங்களிடம் (ஜமாஅத்திடம்) கேட்டு உண்மையை அறிந்துகொண்டு, ஒரு ரக்கஅத்து மட்டும் தொழவைத்து ஸலாம் கொடுத்து, மேலும் இரண்டு ஸஜ்தா

---

↑ ஸஹீஹைன், மிஷ்காத்
† ஸஹீஹைன், மிஷ்காத்
÷ ஸஹீஹைன், மிஷ்காத்
* அபூதாவூத், இப்னுமாஜா, மிஷ்காத்
‡ முஸ்லிம், மிஷ்காத்

(ஸஹ்வு) செய்து முடித்து, அப்போதே தொழுகையை விட்டு வெளியே வந்து விட்டார்கள்.

இவ்வாறு ஸஜ்தா ஸஹ்வு மூன்று வகையாகச் செய்யலாம். இவை, ஸஹீஹானவையும் நேர்மையானவையு மாகும்.

† நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—யாரேனும் மறதியாக ஐந்து ரக்கஆத்துகள் தொழுக விட்டால், (ஸஹ்வுக்கா ஸஜ்தா செய்வாராக.) அப்படி செய்யும் இரண்டு ஸஜ்தாக்கள் ஒரு முழு ரக்கஅத்தாக உருவாகி, எல்லாம் சேர்ந்து ஆறு ரக்கஅத்துகளாய் விடும். அதாவது நான்கு ரக்க ஆத்துகள் பர்லும், இரண்டு ரக்கஅத்துகள் நபிலு மாய்விடும். அங்ஙனம் அது ஐந்தாக இல்லாமல், நான்காகவே இருந்திருந்தால், செய்யப்படும் ஸஹ்வுடைய ஸஜ்தா, ஷைத்தானுக்கு மானஹீனத்தை உண்டாக்கி வைக்கக் காரணமாகும்.

பொதுவாக, தொழுகையில் எந்த விதமான சந்தேகம் ஏற்பட்ட போதிலும் சரி, கடைசியில் ஸஹ்வு (மறதி)க்காக, இரண்டு ஸஜ் தாக்கள் செய்து கொண்டால் தொழுகையில் எவ்விதக் குறைப்பாடும் இல்லாமல் நிறைவேறிவிடுகிறது.

‖ (தொழுகை முடிந்த பின்) இமாமும் முக்ததீயும், தொழுகையில் ஏதோ மறதி ஏற்பட்டதைப் பற்றி சம்பாஷணை புரிந்து கொண்டாலும் சரி, அல்லது பேசாமல் வீட்டுக்குப் போய்விட்டாலும் சரி, தொழுகையில் எந்த விதமான குறைபாடும் உண்டாய்விட மாட்டாது.

பின்னால் தொழுகும் முக்ததீயுடைய தொழுகையில் ஏதேனும் முக்கிய அம்சம் (ருக்னு) விட்டுப் போனால், இமாம், தொழுகையை முடித்து ஸலாம் கொடுத்த பிறகு, முக்ததீ எழுந்து அந்த ரக்கஅத்தை மட்டும் இரண்டாம் முறையாக தொழுதுக் கொள்ள வேண்டும்; ஏனெனின் இப்படிப்பட்ட நிலைமையில், ஸஹ்வுக்காக ஸஜ்தா செய்து விடுவதால், விடப்பட்டுப் போன ருக்னுடைய குறைபாடு நீங்கிவிட மாட்டாது.

தொழுதுக் கொள்பவர் ஒன்று அல்லது இரண்டு ஸஜ்தாக்களையும் மறந்து எழுந்து விட்டால், எப்போது ஞாபகம் வருகிறதோ அப்போதே அந்த ஸஜ்தாக்களை நிறைவேற்றிக் கொண்டு, கடைசியில் ஸஹ்வுக்காக இரண்டு ஸஜ்தாக்கள் (வழக்கம்போல்) செய்யவேண்டும்.

---

† முஸ்லிம், மிஷ்காத்

‖ முஸ்லிம், மிஷ்காத்

தொழும் தொழுகையானது பர்லாக இருந்த போதிலும், ஸுன்னத்தாக இருந்த போதிலும், நபிலாக இருந்தபோதிலும், எல்லாவற்றிலும் ஸஹ்வு (மறதி) ஏற்படும் நிலைமைகளில் இரண்டு ஸஜ்தாக்களே செய்ய வேண்டும். ஒரே தொழுகையில் அநேக மறதி (ஸஹ்வு)கள் ஏற்பட்டபோதிலும் சரி, அதற்காக ஒரே ஒரு விடுத்தம், தொழுகைக்குக் கடைசியில், ஸஹ்வுக்காக இரண்டு ஸஜ்தாக்கள் செய்தால் போதுமானதாகும்.

(தொடரும்)


## மஜ்மூஉஸ் ஸலவாத்து

இப்புத்தகம் அல்லாஹு தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னாவைப் பொதிந்த துஆ கன்ஜுல் அர்ஷும் இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரில் எப்போதும் க்ஷேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும் மற்றும் ஸலவாத்துக்கெல்லாம் தாயானதுமான உம்மு ஸலவாத்தும், இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கௌதுஸ் ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரி ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் கவ்திய்யா ஸலவாத்தும், இன்னும் ஸெய்யிதினா குத்புல் அக்தாபு வகௌதுல் அஃபாபு ஜிந்தா ஷாஹ் மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் மதாரிய்யா ஸலவாத்தும், இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும், துஆக்களும் ஒருங்கே சேர்ந்த அருமையான கிதாபு. சுத்தத் தமிழில் சிறியதாய்பாக்கெட் புத்தகம் போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1–00

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 1–00

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

புதிய இரண்டாம் பதிப்பு

# நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம்

(சீருவசனம்)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அவதரித்தது முதல், வபாத்து வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1-8 பேஜ் ஸைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது. விலை ரூ. 8–00

# உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூ. 3–00

# டர்க்கி பால்கன் யுத்த சரித்திரம்

இதில் ஐரோப்பா கண்டத்திலுள்ள புராதான இராஜ்ஜியமாகிய டர்க்கிக்கும், பால்கன், ஸர்வியா, மாண்டி நீக்ரோ, யூனான் (கிரீக்) முதலிய இராஜ்ஜியங்களுக்கும், உலக முதலாவது யுத்தத்திற்கு முன்பு, நடந்து வந்த அற்புதமாகிய சண்டைகளைப்பற்றி மிக விரிவாக எழுதப் பட்டிருக்கிறது.

விலை ரூ. 2–00

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# முட்டை சுமந்த
# குடியரசு தலைவர்!

(எஸ். எம். முஹம்மது முஸ்தபா ஆலூரிய்யி)

உலகமென்னும் அருள் பூமியாகிறது குடைபோன்ற வானின் கீழ்த் திசையில் அமைந்த மக்களை தன்னோடு சேர்ந்தவனாக செயல் படுத்தி, தன் இருட்டறை என்னும் சுரங்கத்திற்குள்ளே யாவருக்கும் தெரியா வண்ணம் ஒளித்து வைத்திருக்கிறது. இதன் உள்ளே புதை யுண்ட மானிட வர்க்கத்தினர்கள் மண்ணடியிலிருந்தே வேதனை என் னும் பரலோக துன்பத்தைப் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இவ் வாறாய மனிதன் தன் ஜீவிய சரித்திரத்திலே தோல்வியுற்றவனாதலால் அவனுக்கு 'இன்னா' போன்றவைகள் மலிந்து காணப்படுகிறது.

இதன் காரணமாகத்தான் நாட்டின் அகத்தே வாழும் மனிதர் களை மனிதர்களாய் பக்குவப்படுத்த சொல்மாரியாகவும், செயல்மாரி யாகவும் விதை போன்று தெளித்த நம் முன்னோர்களில் பலர் உடல் பொருள், ஆவி போன்ற அத்தனையும் தியாகம் செய்து தியாகி என் னும் மேன்புகழை கொய்தெடுத்தார்கள். மன்மத வாழ்வில் மனிதன் மதிகெட்டு வாழுகிறான்! துயரத்தைக் கொடுக்கக்கூடிய 'துன்பம்' மனிதனின் பிறப்பிடம்! துன்பத்தை வெல்ல மனதை மாற்றுவதுதான் மகத்தானதாகும் என எண்ணி வழிவந்த வாழ்க்கையை கொடுக் கக் கூடிய பணமும் வேண்டா! திடீரென தாக்கும் திருடர்களுக்கும் அஞ்சவேண்டா! பழி பாவங்கள் புரியும் பாவிகட்கும் அஞ்சவேண்டா! என ஹிம்சையின் ஆதிக்கத்திலிருந்து 'அஹிம்சை' யின் ஆதியாய் சமைந்த, அஹத்தென்னும் அல்லாஹ்வின் அன்பைப் பெற்ற, அகிலத் தின் அறிவைப் பெற்று அரசனின் கொடியின் கீழ் வாழ்ந்த சிரோன் மணிகளான சிறப்புற்றோர்தாம் நம் முன்னோர்கள். பண்டை நாளில் பதவியால் பதவிபடைத்த, பாசத்தால் நேர்மை வாய்ந்த பணத்தால் பக்குவமடைந்த மா! பேர் அரசர்களும் அப்படியேதான்.

இங்ஙனமுள்ள சான்றோர் என்னும் சமாதான மேன்மக்களின் சரிதைகளில் சாலவும் சிறந்தோர்களில் ஒருவர்தான் அமீருல் முஃமி னீன் ஸையிதுனா உமர் பாரூக் ரலியல்லாஹு அன்ஹு.

மன்னர்பிரான் வேளா வேளைகளில் மக்களின் சேவையை முன் னிட்டு மாறு வேடம் கொண்டு நீதித் துறையில் ஈடுபட வீதி வழியாய் செல்வது அவர்களின் முக்கிய வேலையா யிருந்தது. தத்தம் நேரங் களில் தாம்கண்ட கலவரங்களையும், துன்பங்களையும் நீக்கும் நிபுணரா யிருந்தார்கள். அந்தோ! ஓர்நாள் மன்னர்பிரான் அவர்கள், ஊரைச் சுற்றி கவனித்து வீதிகளின் வீடுகளை ஆராய்ந்த நன்னாள், நிசப்தம்

நிறைந்த நள்ளிரவில், குதூகலம் நிறைந்த புது இரவில் கலீபா (ரலி) ஓர் வீட்டினருகில் சென்றபோது அங்குள்ள பசும் தளிர்களான குழந்தைகளின் கதறியழும் சப்தம் காற்றில் மிதந்து கலீபா (ரலி) வின் காதுகளை துளைத்தது. வெண்ணெய் போன்ற மனதுள்ள கலீபா அவர்கள், வீட்டின் அகத்தே மாது ஒருவள் தன் குழந்தைகள் பசியால் கதறியழும் சப்தத்தைக் கேட்டு, பசியைத் தீர்க்க மறு வழியின்றி ரொட்டி சுடுவதுபோல் ஓட்டை அடுப்பில் வைத்து பசியால் பரிதவிக்கும் குழந்தைகளை சமாதானப் படுத்த முயன்றதைக் கண்டார்கள். காற்றின் வேகத்தால் அசைந்தாடும் செடி கொடிகளைப் போல் கலீபா அவர்களின் உள்ளமும் நிலைவிழந்து பதைபதைத்தது. நீதியின் நேயர், சமாதானத்தின் வள்ளல், பொதுப் பணியின் பிறப்பிடம், அமைதியின் காவலர் கலீபா அவர்கள் தனதிருப்பிடம் நோக்கி விரைந்து அப்பெண்மணியின் குடும்பத்திற்கு தேவையான உணவு பதார்த்தங்களையும், மாவு மூட்டையையும் அவ்வீட்டிற்கு தனது முதுகின் மீதால் சுமந்து சென்றார்கள் நமது கலீபா அவர்கள். தனது வேலையாளை அப்பணியில் ஈடுபட ஏவவில்லை.

இங்ஙனமுள்ள அரும் பெரும் பணியில் ஈடுபட்ட மகாத்மா அவர்கள் தங்களில் இரு கரங்களாலேயே மாவைப் பிசைந்து அடுப்படியில் உட்கார்ந்து ரொட்டி சுடும் நேரத்தில் அடுப்பை 'ஊதி ஊதி' அவர்களுடைய வாயும் நோவு கொடுத்தது. கண்களும் புகைந்து, புகைந்து தாடியின் இடைவெளிப் பாகங்கள் வழியாய் புகைகள் புகுந்து சென்று கார்மேகங்கள் வானில் ஒன்றாய் சேர்வதைப்போல் அவைகளும் அவர்களின் தாடியின்கீழ் புகை மண்டலமாய் கூடிற்று.

இவ்விதக் கஷ்டங்களுக் குட்பட்ட கலீபா அவர்கள் ரொட்டியும் சமைத்து அக்குடும்பத்தினர்க்கு முன்னால் சமர்ப்பித்தார்கள். இவ்வித பசியின் வாட்டத்திற் குட்பட்டு சஞ்சலித்த அக்குடும்பத்தினர்கட்கு பொதுப் பணத்திலிருந்து பண சகாயமும் செய்து கொடுத்து ஆதரவற்ற அபலைக் குடும்பங்களை ஆதரித்து, தன் காதாலேயே வாழ்த்தொலி கேட்டு மகிழ்ந்தார்கள் இவ்விதமான இறைவனுக்காக நாட்டை சீர்திருத்த முறையில் ஆட்சி செய்யும் மேன்புகழ் வாய்ந்த மகாத்மாக்கள் இருந்தால் பதவி பித்தேது? ஆட்சி குழப்பங்களேது? சமாதானமின்மை ஏது? பட்டினி பசியேது? அநாகரீக செயல்களேது? இவ்விதமான அரசியல் நடந்தால் நாட்டின் முற்போக்கு சமூகத்தின் 'வைகறை யுதயம்' போல் காட்சிதரும். இப்பேற்பட்ட மகாத்மாக்கள் உலக அரங்கில் தோன்றுவார்களேயாயின் உலக நாடுகளனைத்தும் சமாதானத்திலும், நாகரீகத்திலும், அறிவிலும், ஒற்றுமையிலும், சத்தியத்திலும், செழுமை போன்ற உயரிய பாதைகளிலும் முன்னேறும் என்பதில் வியப்புண்டோ!

# வெற்றி தரும் மாதம்

(மாஸ்டர் கமால் பாபு)

ஹிஜ்ரி வருஷத்தின் இரண்டாவது மாதமாகிய இச்ஸபர்மாதத்தை பகுத்தறிவை பயன் படுத்தாத, பரிசுத்த இஸ்லாம் மதத்தை சரிவர உணர்ந்து கொள்ளாத பெரும்பாலான முஸ்லிம்கள் பீடை, பிணிகள் இறங்கும் மாதமென்று கருதுவதோடு நில்லாமல் அந்தப் பிணிகளையும் பீடைகளை ஒழிக்கவும் சில ஒடுக்கமற்ற வேலைகளும் மார்க்கத்திற்கு முறணான காரியங்களும் செய்து வருகிறார்கள்.

உதாரணமாக, பச்சை இலைகளில் அரபி ஆயத்துகளை எழுதிக் குடித்தும், பச்சை இலையை மிதிக்கவேண்டுமென்றும், ஸபர் மாதத்தில் 'ஸபர்' (பிரயாணம்) செய்ய வேண்டுமென்றும் ஆண் பெண் அடங்கலும் கூட்டமாகக் கூடிக் கொண்டு தோப்பு துறவுகளுக்கும் மலை குகைகளுக்கும் சென்று வருவதோடு அல்லாமல், தம்மீது இறங்கிய பீடை, பிணி, துன்பங்கள் யாவும் ஊருக்கு வெளியே சென்று பச்சைஇலையை மிதித்தும் குடித்தும் ஒழித்துவிட்டு வந்ததாகவும், ஈமானே இருக்கும் இடம் தெரியாமல் ஓடிப்போகும் வண்ணம் இன்னும் ஏதேதோ அறிவிற்க் கெட்டா அர்த்தமற்ற வேலைகளும் அகமலர்ந்து முகமலர்ச்சியோடு செய்து வருகிறார்கள். இம்மாதத்தில் வீடுகட்டுவது, குடிபோகுவது, கல்யாணம் முடிப்பது; போன்ற நல்ல காரியங்களை அறவே செய்ய மாட்டார்கள். சில வீடுகளில் இம்மாதத்தில் இறங்கும் முஸீபத்துகளுக்கெல்லாம் அணைகட்ட—இல்லை—வேதனை தரும் துன்பங்கள் வீட்டுக்குள் நுழையாதபடி தடை செய்ய, தெருக்களிலே தென்படும் தேய்ந்துபோன குதிரை லாடங்களை கொண்டுவந்து வீட்டு தலை வாயிலில் தொங்க விடுகிறார்கள் சில மதி இழந்த மூடர்கள்.

மேலும், இம்மாதத்தில் யாராகிலும் நோய்வாய் பட்டால் மீண்டும் பிழைத் தெழுந்திருக்க முடியாதென்று ஜோஸ்யமும் கூறி விடுகிறார் சில அறிவு இழந்த அற்பர்கள், தன்னையே ஆயுளை நிர்ணயிக்கும் ஆண்டவனாக நினைத்து. யாராகிலும் இதற்கு காரணம் கேட்டால், இந்த மாதத்தில்தான் நபி நாயகம் அவர்கள் நோய்வாய் பட்டதாகும், 'ஆகிரி சார்ஷம்பா' என்னும் ஒடுக்கத்து புதன் அன்று ஒன்பது லட்சம் பீடைகள் இறங்குவதாயும் அர்த்த மற்ற ஆதாரமில்லாத அறிவிற்கு பொருந்தாத இவ்விதமாக ஆயிரமாயிரம் காரணங்களை கூறுகிறார்கள் தன்னையே ஒரு பெரிய அறிவாளி என கருதும் சில அறிவீனர்கள். இப்படியே முஸ்லிம் மக்களுக்கிடையே இருக்கும்

ஒழுக்கமற்ற வேலைகளை விவரித்துக் கொண்டே போனால் ஏட்டிலே இடமிருக்காது. எனவே, இதை இத்துடன் நிறுத்தி விட்டு பகுத்தறிவை சற்று பயன் படுத்தலாம்.

எந்த நபிநாயகம் அவர்கள் நோய்வாய் பட்டதாக ஸபர் மாதத்தைப் பீடைமாதமாக கருதும் நாம், அதே நபி நாயகம் 'ரபீயுல் அவ்வல்' மாதத்தில் மரணமடைந்தாரே! அதை நாம் பீடை மாதமாகவோ பிணிகள் நிறைந்த நாளாகவோ கருதுகிறோமா? இகபரம் புகழும் இரசூல் நபி அவர்கள் இவ்வுலகை நீத்தாரே அந்த மாதம் போல் பீடை நிறைந்த மாதம் வேறு மாதம் இவ்வுலகில் இருக்க முடியுமா? அந்த மாதத்தையே பீடை மாதமாகவோ 'நஹஸ்' நாளாகவோ கருதக்கூடாதென்று சட்டம் பிறப்பித்த 'சன்மார்க்கம்' ஸபர் மாதத்தை மட்டும் பீடை மாதமாக கருத அனுமதி அளிக்குமா? இவைகளை ஆராயாமல் அர்த்த மற்ற வேலைகளை எல்லாம் அகமகிழ்ந்து செய்வது ஏக தெய்வ கொள்கைமீது 'ஈமான்' கொண்ட நம் முஸ்லிம்களுக்கு அழகா?

'ஷஃபான்' மாதத்திலே நடந்த 'உஹத்' யுத்தத்திலே முஸ்லிம்களுக்கு பலத்த தோல்வி ஏற்பட்டதுமல்லாமல், கருணை மூர்த்தி காருண்ய சீலர் கோமான் நபி அவர்களின் முபாரக்கான இரண்டு பற்கள் உடைந்து, உடலில் இருந்தும் உதிரம் கொட்டியது. கருணை வள்ளல் நபி நாயகம் அவர்களை நேரில் காணாமலே அவர்மீது காதல் கொண்ட தீர்க்கதரிசி ஒருவர் பாச நபி அவர்களின் பல் தகர்ந்தது என்று கேட்ட மாத்திரத்தில் எந்தப் பல் உடைந்தது என தெரியாததால் தன்னுடைய முப்பத்திரண்டு பற்களையும் உடைத்துக் கொண்டார், என்ற சம்பவத்தை சரித்திர ஏட்டிலே காணும்போது நெஞ்சு வெடிக்கிறது. அந்த மாதத்தையும் நாம் பீடை மாதமாக கருதுவதில்லை.

அதே உஹத் போர் களத்திலே, உலக தயாளர் உத்தம நபி அவர்களின் உள்ளத்தை கவர்ந்த தங்களது சிறிய தந்தையாரான ஹஜ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள், சதி ஒன்றையே தன் சகோதரர்களாக கருதும் சத்துருக்களால் சித்திரவதை செய்யப்பட்டார், என்ற விஷயத்தை சன்மார்க்க வரலாற்றிலே காணும் போது, இதயத்திலே இஸ்லாமிய ஜோதி 'ஈமான்' என்ற ஈடு இணையில்லா பொக்கிஷத்தை வைத்துள்ள எந்த முஸ்லிம் உள்ளமும் துடிதுடிக்காமல் இருக்க முடியாது. அத்தகைய நாளையும் கிழமையும் நாம் 'நஹஸ்' என்று சொல்லுகிறோமா? இவ்விதமான உதாரணங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் காட்டலாம். ஆனால் ஏடுதான் பத்தாது.

அரபி மாதங்களில் சில மாதங்களுக்கு சிறப்புப் பெயர் தரப் பட்டிருக்கின்றன. உதாரணமாக, 'ஷஃபானுல் முஅஃளம்' (மேன்மைக் குரிய ஷஃபான்) 'ரமலானுல் முபாரக்' (முபாரக்கான ரமலான்)

'ஷவ்வாலுல் முகர்ரம்' (கண்ணியமிக்க ஷவ்வால்)என்பனபோன்றவை. இதேபோல் இந்த மாதத்திற்கும் 'ஸபருல் முளப்பர்' (வெற்றி தரும் ஸபர்) என சிறப்புப் பெயர் உண்டு. இம்மாதத்திற்கு இத்தகைய சிறப்புப் பெயர் வர காரணமில்லாமலில்லை. சன்மார்க்க சரித்திரத்தை புரட்டி பார்க்கும்போது, இந்த ஸபர் மாதத்தில்தான் முஸ்லிம்கள் புனித போருக்கு சென்று 'ஜெயக்கொடி' நாட்டி திரும்பி வந்தது தெரிகிறது. இதன் காரணமாகவே இம் மாதத்திற்கு, சந்தோஷம் தரும், வெற்றி தரும் மாதமென்று சிறப்புப் பெயர் கிடைத்துள்ளது. இதுதான் சரித்திர உண்மையாகும். இதற்கு மாறாக 'ஸபருல் முஸீபத்து' (நஹஸ் நிறைந்துள்ள ஸபர்) என்று பிதற்றிக் கொண்டு அதற்காக மார்க்கத்தில் இல்லாத வேலைகளை எல்லாம் செய்து, தான் கெடுவதுமின்றி பிறரையும் பாபத்திற்கு ஆளாக்குவது கூடாத காரியம் மட்டுமல்ல, குபிரான செயலுங்கூட.

சன்மார்க்க சட்டப் பிரகாரம் முஸ்லிம்களுடைய வாழ்வில் எந்த நாளும் பீடை நாளோ நஹஸ் நாளோ கிடையாது. ஆனால் என்றைய தினம் ஒரு முஸ்லிம் 'பஜர்' தொழுகையை தொழுகாமல் விட்டு விடுகிறானோ அன்றைய தினமே அவனுக்கு நஹஸ் நாளாகும். இந்த ஸபர் மாதத்தை பீடை மாதம் என்பது சற்றும் சன்மார்க்கத்திற்கு பொருந்தாத விஷயமாகும்.

ஏனெனில், "ஏ! ஜனங்களே! ஸபர் மாதம் பீடை என்பதும் தொத்து வியாதி என்பதும் திட்டவட்டமாக கிடையாது" என்று நபி நாயகம் அவர்கள் கூறியதை ஸஹீ மிஷ்காத் பக்கம் 492 சாட்சி சொல்லுகிறது.

இத்தனை ஆதார பூர்வமான ஹதீதுகளும் சரித்திர சான்றுகளும் ஸபர் மாதம் பீடை மாதமல்ல, "வெற்றி தரும் மாதம்" என பகர்வதை பார்த்தும், பாபத்திலே அதுவும் பரிசுத்த இஸ்லாமை பழிக்கும் வண்ணம் இஸ்லாமில் பிறந்த எந்த முஸ்லிமாவது நடந்து கொள்ளுவானா? அப்படி நடந்து கொள்ளமாட்டான் என்ற நம்பிக்கையுடன், நமக்கு நல் ஹிதாயத் தந்து ரட்சிக்கும்படி நாயனை மன்றாடி கேட்டுக் கொண்டே இக்கட்டுரையை முடித்துக் கொள்கிறேன்.

# மிப்தாஹுஸ்ஸலாஹ்
# பீ யீலாஹின்னிகாஹ்

(இப்புத்தகம் இல்லற வாசிகள் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது.)

இதில் நிக்காஹுடைய வரிசைகளும், அஹ்காம்களும், ஸ்திரி புருஷருடைய குணலக்ஷணங்களும், ஒவ்வொருவரும் இன்ன குணமுடையவர்களென்று பார்த்த மாத்திரத்தில் கண்டறியக்கூடிய வழியும், ஸ்திரீ புருஷர்கள் அவசியம் அறிய வேண்டிய அநேக ரகசியங்களும், ஒரு புருஷன் விரும்பிய மனைவியையும், ஒரு ஸ்திரீ விரும்பிய கணவனையும் அடைவதற்கு வேண்டிய இஸ்முகளும் அடங்கி யிருக்கின்றன.

இவை யன்றி ஸ்திரீ புருஷருக் கிடையில் முஹப்பத் உண்டாவதற்கும் ஹமல் உண்டாவதற்கும், ஹமலைக் காப்பதற்கும் அவசியமான இஸ்முகளும், ஹமலில் உண்டாகக் கூடிய பலவகை வியாதிகளுக்கு அரிய ஔஷதங்களும் கூறப் பட்டிருக்கின்றன.

முன் பதிப்பி லிருந்ததைவிட இப்பதிப்பில் அநேக அரிய விஷயங்களும் இஸ்முகளும் சேர்க்கப் பட்டிருக்கின்றன. வாசிப்போர்க்கே இந்நூலின் அருமை விளங்கும்.

புதிய பதிப்பு கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு

விலை ரூ. 3

---


கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

## அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

## 11-வது அத்தியாயம்.

பிராட்வேக்கு அருகில் உள்ள நீளமான, குறுகிய வீதி யொன்றில் நீண்ட, ஒல்லியான மனித ரொருவர் வசித்து வந்தார். அவருக்கு நிலையான தொழி லெதுவும் இல்லை போல் தோன்றியது. அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கு அவர் "இராக்கால பட்சி". பட்டப் பகலில் எவரும் அவரைக் கண்டதில்லை. அவர் வசித்து வந்த வீட்டுச் சொந்தக் காரருக்குக் கூட அவரைப் பற்றிய உண்மைத் தகவல்கள் தெரியாது. இராக்கால ரோந்து போலீஸாரும் அதிகாலையில் அலுவலினிமித்தம் வெளியே செல்வோரும் பிராட்வேயில் இரவு வேளைகளில் அவர் சஞ்சரிப்பதைக் கண்டிருக்கின்றனர். ஜனப் எம். எ. முஹம்மது ரஜாக்கான் என்று அவர் அழைக்கப் பட்டார். அந்தப் பெயரில் அவருக்குக் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன—உத்தியோக முத்திரையிடப் பெற்று மூடிய நீண்ட நீல நிறக் கடிதங்கள் அவருக்கு வந்து கொண்டிருந்தன. இதன் மூலம், அஞ்சல் அலுவலக வட்டாரத்தினர் அவர் அரசாங்க அதிகாரி போலும் என்று எண்ணிக் கொண்டிருந்தனர்.

அவருக்கு ஸ்தல போலீஸார் எவ்வித தொல்லையும் விளைவித்ததில்லை. அவரைப் பற்றிய பிரஸ்தாபமும் அனுமதிக்கப் படவில்லை. அன்று பிற்பகல் அவரைக் காண்பதற்கு கரீம் ஷரீப் வந்திருந்தான்; வேறு எவரும் இவரைக் காண்பதற்கு இதற்கு முன்பு வந்திருந்ததை எவரும் கண்டதுமில்லை; கேட்டது மில்லை.

சிறையிலிருந்து விடுதலையான போது உலக விவகாரங்களில் தெளிவும் தேர்ச்சியும் பெற்றவனுக கரீம் ஷரீப் வெளியே வந்தான். எதிர்த்த நிலையை யுணர்ந்து எளிதில் சமாளிக்கும் விஷயத்தில் அவனது மைந்தன் காதர்கானை விட அவன் மிக கெட்டிக்காரன்; ஆயுளில் பெரும் பகுதியைச் சிறையில் கழித்து 'சிறை முத்திரை' பெற்றுவிட்டு முதியவனுன அவன் அஞ்சா நெஞ்சன். காதர்கானைச் சூழ்ந்துள்ள ஆபத்தை அறிந்துணர்ந்து கொண்ட அவன் அதற்காக நடவடிக்கை எடுக்கலானுன். என்றாவதொரு நாள்—வெகுசீக்கிரமோ அல்லது வெகு காலம் கழித்தோ காதர்கானை சட்டத்தின் இரும்புக் கரங்கள் பிடித்துப் பிணைத்து விடும்; இப்போது அவன் அனுபவித்து வரும் உல்லாச வாழ்வு முற்றுப் பெற்றுவிடும். ஒவ்வொரு குற்றத்துக்கும் தண்டனை தவிர்க்க முடியாததல்லவா? காரிய சாதனையில் 'கண்' உள்ள கரீம் ஷரீப் துணிச்சலான காரியம் செய்யத்

துணிந்தான். அவனது அம்முயற்சி நீதி பரிபாலன முறைக்கு இழிவு தேடுவதோடு, போலீஸ் இலாகாவுக்கும் பொல்லாத பெயர்ஏற்படுத்துவ தாகும்.

துப்பறியும் நிபுணர்களில் பலரைச் 'சரிக்கட்டி' விட்டிருக்கிறுன் கரீம்; வயது முதிர்ந்த காலத்தில் கூட துப்பறிவோர்க்கு துட்டு கொடுத்துத் துரும்புக்குச் சமானமாக்கியிருக்கிறுன். சட்டத்தின் காவலர்களுக்குக் 'கண்ணி' வீசும் கலையில் கரீம்ஷரீப் கை தேர்ந்தவன். அவனது வாழ்வில் லஞ்சப் பேய்க்குப் பலியாகாத மூன்று அல்லது நான்கு மனிதர்களைத் தான் அவன் கண்டிருக்கிறுன். பெரிய கள்ள ஞெருவன் நூறு ரூபாய் வீசி யெறிந்தால் அவனது காரியம் சுலபமாகி விடுகிறது; ஆயிரம் ரூபாய் அள்ளி யெறிந்தால் அவனது செயல் அம் பலமாகாது. ஆனுல் கள்ள ஞெருவன் மீது 'கண்' விழுந்து விட்டால் லட்ச ரூபாய் கூட நீதி தேவனின் தவிர்க்க முடியாத போக்கைச் சீர் குலைக்க முடியாது. இந்த உண்மைகளனைத்தையும் உணர்ந்தவனுன கரீம் ஷரீப் வெற்றி காண முடியு மென்ற நம்பிக்கையுடனிருந்தான்.

அவன் கேட்டறிந்தவை உண்மையாயின், அவனது வாலிப வய தில் இருந்ததை விட போலீஸ் இலாகாவில் வேறு பெரும் மாறுத லெதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. இரகசியப் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர்கள் தான் அவனுக்குப் புதியவர்கள். ஒவ்வொரு வருட வரவு செலவுத் திட்டத்திலும் போலீஸ் இலாகாவுக் கென கணிச மான தொகை ஒதுக்கப்பட்டு வந்தாலும் இரகசிய போலீஸ் இலாகா வினர் நாவலாசிரியரின் சிருஷ்டியே யாவர் என்பது அவன் எண்ணம். ஜனுப் ரஜாக் கூட பாங்க்களின் கூலியாளே யன்றி அரசாங்க அதிகாரி அல்ல என்பது அவனது அபிப்பிராயம்.

வலையை இறுக்கிப் பிடிக்க வேண்டு மென்பதில் அவன் கண்ணுங் கருத்துமாக விருந்தான். "இராக்கால பட்சி" ஜனுப் ராஜக்கின் இருப்பிடத்தைக் கண்டு பிடித்து விட்டால் மற்ற காரியமெல்லாம் சுல பம் என அவன் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தான். பல மாதங் கள் பாடுபட்டுழைத்ததன் பயனுக, முதல் கட்டத்தில் வெற்றி கண்ட அவன், இரண்டாவது, இறுதிக் கட்டத்திலும் வெற்றி காணலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தான். ஆனுல் ஜனுப் ரஜாக் அவனது வலையில் மாட்டிக் கொள்வாரா?

அவனுக்குக் கதவைத் திறந்து விட்ட நடுத்தர வயதுடைய நங்கை அளித்த 'வரவேற்பு' குதூகல மானதல்ல.

"எஜமானர் அலுவலாக இருக்கிறுர். எவரையும் காண்பதற்கு அவர் விரும்ப வில்லை." என அவள் மொழிந்தாள்.

புன்னகை ததும்ப மிக வினயமாக கரீம் சொன்னுன்: "தொழில் விஷயமாக கரீம் ஷரீப் காண வந்து காத்திருப்பதாக தயவு செய்து அவரிடம் சொல்கிருயா?"

கதவைச் சாத்திவிட்டு அவள் உள்ளே சென்ருள். நீண்ட நேரமாகியும் அவள் திரும்பி வராததால் தனது பெயரிலுள்ள மந்திர சக்திகூட நுழைவுச்சீட்டு பெறத் தவறிவிட்டது போலும் என்று அவன் முடிவு செய்தான். ஆனல் அவனது அம்முடிவு அவசரமானது, ஆதாரமற்றது. கதவு திறக்கப் பெற்று அவன் உள்ளே பிரவேசித்ததும் மூடிப் பூட்டப் பெற்றது.

வெளித்தோற்றத்துக்கு அந்த வீடு நன்ருக காட்சி யளித்தது. முதல் மாடியில் அவன் அனுமதிக்கப்பெற்ற அறை உத்தியோக வாடை வீசியது. பெரிய மேஜைக்கு அருகில் ஐம்பது அல்லது அறுபது வயது மதிக்கத்தக்க மனிதரொருவர் உட்கார்ந்திருந்தார். ஒற்றை நாடியுள்ள அவர் வருத்தத்தோடு காணப்பட்டார். அவரது தலைமுடி நரைத்திருந்தது. அவரது காதுகள் முறம் போல பெரியன வாக விளங்கின; கண்களும் விளாங்காய்மாதிரி இருந்தன. ஒரு விஞடி யில் அவரை நோட்டமிட்டு விட்டான் கரீம். முதலில் அவர் தான் பேசினுர்.

"அஸ்ஸலாமு அலைக்கும்" அவர் எழுந்திருந்து கைலாகு கொடுத்து வரவேற்று, வாருங்கள் உட்காருங்கள் எவருக்கும் நான் போட்டி அளிப்பதில்லை. ஆனல் உங்கள் பெயர் ஞாபக மிருப்பதாக நினைக்கிறேன். நான் அந்த பெயரை எங்கு கேள்விப்பட்டேன்? என்ருர்.

அசிரத்தையாக, அசுவாரஸ்யமாக மூக்குக் கண்ணுடி மூலம் முறைத்துப் பார்த்தார் அவர். அவரது அசட்டையான போக்கிற்கு ஈடு செய்வதாக கரீம் ஷரீபின் புன்னகை அமைந்தது.

"உங்களிடம் சொல்வதற்காக சிறு தகவல் கொண்டுவந்திருக் கிறேன். துணைவர்களின் துரோகத்தின் விளைவாகச் சிறைவாசம் அனுபவித்த துரதிர்ஷ்ட மனிதர்களில் நான் ஒருவன் என்பது உங்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன்."

"ஆம், வாஸ்தவம். எனக்கு நினை விருக்கிறது. கப்பற் கொள்ளைக்காரரல்லவா நீங்கள்? ஆம், நீங்கள் கப்பல்கொள்ளையில் சம் பந்தப்பட்டிருந்திருக்கிறீர்கள். கரீம் ஆ! உங்கள் பெயரும் எனக்கு நினைவு வந்து விட்டது. உங்களுக்கு ஒரு புதல்வர் இருக்கிரு ரல்லவா?"

"ஆம், எனக்கொரு மைந்தன் உண்டு. அவனியில் அவனைப் போன்ற சிறந்த பையனைக் காண்பதரிது."

ஜனுப் ரஜாக்கின் வலது பக்கத்தில் டெலிபோன் ரிஸிவர் இருந்தது. சம்பாஷணையின் போது அதில் கைவிட்டு அதனை அவர் திருப்பிக் கொண்டே யிருந்தார். அவரது இச்செயல் அவனுக்கு முதலில் வியப்பையும் பின்னர் வெறுப்பையும் அளித்தது.

"அவன் ஒருபோதும் சங்கடத்திற் குள்ளாக வில்லையா? அது அவனது அதிர்ஷ்டம் ஆகும்."—அவர் பெரு மூச்சு விட்டார். "இக் காலத்தில் இளைஞர்கள் பலர் இழிந்த செயல் ஏதாவது செய்து சங்கடத்துக் குள்ளாகின்றனர்."

மைந்தனைப் பற்றிய பிரஸ்தாபத்தை கரீம் ஷரீப் விரும்பவேயில்லை. காதர்கானைப் பற்றி பேச்சைக் கூடுமான வரை தவிர்த்துக் கொள்வதற்கு அவன் முயற்சித்தான்.

"அரசாங்கத்துக்காக—போலீஸ் இலாகாவில்—நீங்கள் விசேஷ அலுவல் பார்த்து வருவதாக நான் அறிகிறேன். வாஸ்தவமா?"

"போலீஸ் இலாகாவில் அல்ல" "இராக்கால பட்சி" முணுமுணுத்தது. "நிச்சயமாக இல்லை—போலீஸ் இலாகாவில் நான் இல்லவே இல்லை. போலீஸ் காரனொருவனைக் கூட நான் அறியமாட்டேன். வீதிகளில் போலீஸார் வலம் வருவதைக் கண்டிருக்கிறேன். கண் கவரும் கவர்ச்சி மிக்க மனிதர்கள் அவர்கள்; அவர்களில் பெரும்பாலோர் வாலிப வயதினர். இளமை இன்பம் தரும் காலமல்லவா? உங்கள் மைந்தனைப் பற்றி நீங்கள் பெருமைப் படுகிறீர்கள் என்று எண்ணுகிறேன்.

"அவன் மிக நல்ல பையன்." கரீம் ஷரீப் சுருக்கமாக விடையிறுத்தான். ரஜாக்கான் மீண்டும் பெரு மூச்சு விட்டான்.

"சிறுவர்கள் சிக்கலுண்டாக்குபவர்கள். நான் மணம் செய்து கொள்ளாமலிருப்பது பற்றி மகிழ்ச்சி கொள்வதா என்பது எனக்குத் தெரியவில்லை. உங்கள் மைந்தனுக்கு என்ன தொழில்!"

"ஏற்றுமதி ஏஜென்ட்."

"ஓஹோ! ஓஹோ!"

அவர் அப்பதிலைக் கேட்டு திருப்தி அடைந்தாரா அல்லது அனுதாபம் கொண்டாரா என்பதை கரீமால் கண்டு கொள்ள முடியவில்லை.

"டெஹ்ராடன்னில் இருந்திருக்கிற படியால் தீய மனிதர்கள் பலரை நான் கண்டிருக்கிறேன். இவர்களை எனக்குப் பிடிக்கவில்லை. நான் நிரபராதி என்றால் எண்ண முடியாத தன்மை யடைந்திருக்கும் ஆசாமி யொருவனின் சூழ்ச்சியால் சிறை சென்றவன் நான்" கரீம் கூறினான்.

"செய்த நன்றி மறத்தல்!" ஜனுப் ரஜாக் இடைமறித்தார். "செய்த நன்றி மறைத்தலும் துணைவனுக்கு துரோக மிழைத்தலும் மிக பயங்கர செயல்கள். சிறந்த கல்வி அளித்து, நேரிய பாதையில் வளர்த்து தனது நலனிலும் நல்வாழ்விலும் கண்ணுங் கருத்துமாக விருக்கும் தந்தையைப் பெற்றிருக்கும் உமது மைந்தன் மிக நன்றி யறிதலுள்ளவனாக இருக்க வேண்டும்."

"ரஜாக் சாஹிப், இதோ பாருங்கள்" வீண் வார்த்தையாடாமல் விஷயத்துக்கு வர வேண்டிய வேலை நெருங்கி விட்டதென்று நினைத்து கரீம் சொன்னான். "நான் நேர்மையான மனிதன்; உங்களிடம் நேர்மையாகப் பேச வேண்டு மென்பது எனது விருப்பம். கள்ள நோட்டு அச்சடிப்பதில் எனது மைந்தன் சம்பந்தப்பட்டிருக்கிறானென உம்மை அமர்த்தியுள்ள கனவான்கள் கருதுவதாக நான் கேள்விப்படுகிறேன். இந்த வதந்தியைக் கேள்வியுற்றபோது நான் அடைந்த மனவேதனை சொல்லுந்தரமன்று. எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். 'ஜனுப் ரஜாக்கானிடம் நேரடியாகச் சென்று அவருடன் விஷயத்தை விவாதிப்பேன். உலக விவகாரம் தெரிந்தவர் அவர் என்பது எனக்குத் தெரியும்; தந்தை என்ற முறையில் எனது உணர்ச்சிகளையும் அவரால் உணர்ந்து கொள்ள முடியும் என்பதையும் நான் அறிவேன்?" முழங் கைகளை மேஜை மீது ஊன்றி மிகுந்த நம்பிக்கையுடன் அவன் பேசலானான்: "சில மனிதர்கள் தவறான கருத்துகள் கொண்டிருக்கிறார்கள். அன்றொரு நாள் யாரோ ஒருவர் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார்: "ஜனுப் ரஜாக்கான் கடன் தொல்லையில் சிக்கிக் கொண்டிருக்கிறார். பண பாக்கிக்காக அவர் மீது மூன்று 'வாரண்டு'கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன......"

"அது தற்காலிக சங்கடம் தான்" ஜனுப் ரஜாக் முணுமுணுத்தார். "வாழ்க்கையில் ஒவ்வொரு வருக்கும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதுண்டு அல்லவா?"

டெலிபோன் டயலுக்குள் கை விட்டு திருப்பிக் கொண்டே இருந்தார் அவர்.

"உங்களுக்கு நல்ல சம்பளம் அளிக்கப் படுகிறது என்று நான் நினைக்க வில்லை. உங்கள் சொந்த விவகாரம் பற்றி பேசுகிறேனே யென்று தவறாக எண்ணிக் கொள்ளாதீர்கள்; உலகப்போக்கு உணர்ந்த மனிதர் என்ற முறையில் எனது செயலைப் புரிந்து பாராட்டுவீர்களென நினைக்கிறேன். ஏழைமை நிலையில் இருப்பது என்ன என்பது எனக்குத் தெரியும், எனது அலுவலகத்தில் நல்ல நிலையிலிருந்த மனிதர்கள் இருந்திருக்கிறார்கள் — சமய சந்தர்ப்பத்துக் கேற்றபடி அவனால் சிருஷ்டிக்கப் பட்டது அந்த "அலுவலகம்—" மிக உயர்ந்த ஆசாமி

களெல்லாம் இருக்திருக்கிறுர்கள். 'ஆயிரம் அல்லது இரண்டாயிரம் கொடுத்து எங்களைக் கஷ்டத்திலிருந்து மீட்பீர்களா' என்று அவர்கள் சொல்லி யிருந்தால் இம்மாதிரி கோட்டுக்களைச் சட்டைப்பையிலிருந்து எடுத்து அவர்களிடம் அளித்திருப்பேன்..."

சட்டைப் பையில் கைவிட்டு ரப்பர் வளையம் போட்டு இறுக கட்டப்பட்டிருந்த கோட்டுக் கத்தையை அவன் வெளியே எடுத்தான்.

ரஜாக்கான் ஒரு விநுடி நேரம் தமது சிந்தனையைத் திருப்பி ஆரம்பத்தில் கரீம் ஷரீபை நோக்கியது போல மிக அசிரத்தையாக கோட்டுக் கத்தையைக் கவனித்தார். எச்சரிக்கையாக கை நீட்டி மேலிருந்து ஒரு கோட்டை எடுத்து தடவித் தட்டிப்பார்த்து அதன் மீது பொறிக்கப் பெற்றிருந்த நீர்க்குறியை கவனித்தார்.

"அசல் கோட்டு தான்" மிக மெதுவான குரலில் கூறி மன விருப்ப மில்லாதவர் போல அதனை அவரிடம் திருப்பிக் கொடுத்தார்.

"எந்த மனிதனுவது கடன் தொல்லையில் சிக்கிக் கஷ்டப் படுவானுயின்," கரீம் ஷரீப் அழுத்தம் திருத்தமாகச் சொன்னுன், "அவர் எவனுக இருந்தாலும் எந்த நிலையில் இருந்தாலும் நான் பொருட்படுத்துவதில்லை, உடனே அவனிடம் நான் விசாரிப்பேன: 'ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தால் நீ நிம்மதி பெறுவாயா?'

"ஆ! அப்படியா?" ராஜக்கான் வினவினுர். "எப்படி?"— அதிர்ச்சி அடைந்தவனுக கரீம் ஷரீப் கேட்டான்.

"அதனுல் அவனுக் கேதாவது அனுகூலம் விளைகிறதா?"

"ஆம், வாஸ்தவத்தில் அப்படித்தான்," கரீம் கூறினுன், "நான் சொல்வது இது தான், கனவானெருவனுக்குக் கடன் தொல்லை யளித்தாலும் அவன் பராரியாகி விடவில்லை; அவனுக்கு அவசியமான போது ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ரூபாய் கிடைத்து விடுமாயின் அவன் நிந்தனைக் காளாகாமல் நிலைமையைச் சமாளித்து விடுகிறுன்."

"நீங்கள் கூறியது உண்மை தான். மிக, மிக உண்மை," உணர்ச்சி வசப்பட்டவராய் ராஜக்கான் பேசினுர், "உங்கள் நேசத்துக்கும் பாசத்துக்கும் உகந்த உமது மைந்தனுக்கு விவேகம் நிறைந்த இவ்வார்த்தைகளைக் கூறுவீர்கள் என்று நம்புகிறேன். இத்தகைய தந்தையை அவன் பெற்றிருப்பது மிக கேர்த்தியானது."

மனத்துக்குள்ளேயே அவரைச் சபித்துக் கொண்டான் கரீம்.

"இரண்டாயிரம் ரூபாய்," ரஜாக்கான் மெதுவாகச் சொன்னுர், "ஐயாயிரம் ரூபாய் என்று நீங்கள் சொல்லியிருந்தால்..."

"ஐயாயிரம் ரூபாய் என்று தான் நான் சொல்கிறேன்."

"ஐயாயிரம் ரூபாய் என்று நீங்கள் சொல்லி யிருந்தால், அதில் மூவாயிரம் கள்ள நோட்டு என்பதை நான் அறிந்திருப்பேன்—இன்று காலை இந்தியன் பாங்கிலிருந்து நீங்கள் இரண்டாயிரம் ரூபாய் தானே வாங்கினீர்கள்—அவை அனைத்தும் நூறு ரூபாய் நோட்டுகள், அவற்றின் எண் எம் டி 17331 முதல் 17350 ஆகும். நான் தவருகச் சொன்னேனுனல் என்னைத் திருத்துங்கள். உண்மையில் வேறு ஏதாவது நல்ல, அசல் நோட்டுக்களை ஹோட்டலில் வைத்திருந்திருக்கலாம்; அல்லது திருமண அன்பளிப்பாக உங்கள் அன்பார்ந்த மைத்தன் மூவாயிரம் ரூபாய் கொடுத்திருக்கலாம்—நான் மறந்து விட்டேன், மணமகன் எவனுவது எங்காவது மற்றவருக்கு திருமண அன்பளிப்பு வழங்குவதுண்டா? திருமண அன்பளிப்புகளையும் பரிசுகளையும் அவன் பெறுகிறுனல்லவா? எனது முட்டாள் தனத்தை என்னென்று சொல்வது? தயவு செய்து உங்கள் பணத்தை திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள். இந்த அறையில் புழுக்கமாக இருக்கிறது; உங்களுக்கு ஜல தோஷம் வந்து விடலாம். மலைப் பிரதேசத்தில் வயல் வெளிகளுக்கு நீங்கள் எப்போதாவது சென்ற துண்டா? உவகை யளிக்கும் உல்லாச ஸ்தலமல்லவா அது? ஞாயிற்றுக் கிழமையன்று என்னுடன் தேநீர் அருந்து வதற்காக நீங்கள் வந்து போக வேண்டும்; நாம் சென்று வாத்திய கோஷம் கேட்டு அனுபவிப்போம். இரண்டு மணி நேரத்தை இன்பமாகக் கழிப்பதற்கு இதை விட நல்ல வாய்ப்பு ஏது? என்மீது பிறப்பிக்கப்பட்ட வாரண்டுகளைப் பொறுத்த வரை—அவர் கனைத்து மூக்கை விரலால் தடவி விட்டுக் கொண்டார். உங்களை இங்கு வரவழைக்க வேண்டு மென்று சிருஷ்டிக்கப் பெற்றவை அவை. அவ்வாறு வதந்தி கிளப்பி விட்டு உங்களைச் சந்திக்க வேண்டு மென்பது எனது அவா. பணக்கஷ்டம் என்ற தூண்டில் விடுவது நிச்சயம் கோரிய பயன் தரும் என்று எதிர் பார்த்தேன். நான் எதிர் பார்த்தது வீண் போக வில்லை."

வாயடைத்தவனுக கரீம் ஷரீப் உட்கார்ந்திருந்தான்.

"தௌலத்கான் என்ற வொரு மனிதரை உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் சிறை செல்லு முன்பு அவர் அலுவல் பார்த்தார். அவரைப் பற்றி எப்போதாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? எனக்கு முன்பு பதவியில் இருந்தவர் அவர். அவரை நீங்கள் சந்தித்திருப்பீர்கள் என்று நான் நினைக்க வில்லை. அவர் அடிக்கடி சொல்வதுண்டு: 'கள்ளனைக் கையுங் களவுமாகப் பிடிப்பதற்கு கள்ளத்தனம் செய்? கள்ளத்தனம் என்பதற்கு அந்தக் காலத்தில் நாங்கள் 'பொய்த் தகவல்' என்று அர்த்தம் செய்தோம். அஸ்ஸலாமு அலைக்கும், கரீம் சாஹிப் கீழே செல்வதற்கு உங்களுக்கு வழி தெரியும் என்று எண்ணுகிறேன்."

187066

கரீம் எழுந்திருந்தான். ஒல்லியான அந்த மனிதரும் கீழே குனிந்து தமது அலுவலைக் கவனிக்கத் துவங்கினர்.

"ரஜாக் சாஹிப், நான் சொல்ல விரும்புவது என்ன வென்றால்..." கரீம் ஆரம்பித்தான்.

"எனது வீட்டு வேலைக்காரியிடம் சொல்லுங்கள்." ரஜாக்கான் மிக மெதுவாகச் சொன்னர். அவர் நிமிர்ந்து கூட பார்க்க வில்லை.

"கட்டுக் கதைகளைக் கேட்டு ஆனந்தம் அடைவதில் அவளுக்கு நிகர் கிடையாது. இரண்டாவது குழந்தைப் பருவத்தை அவள் அடைந்து கொண்டிருக்கிருளோ என்று சந்தேகிக்கிறேன். அஸ்ஸலாமு அலைக்கும் கரீம் சாஹிப்"

(தொடரும்)


# மஜ்மூஉ மவ்லூது

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீருன் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும் அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழை பைத்து, ஜுத்பி லுத்பிக முனாஜாத்தும், பீஹுப்பி ஸையிதினு பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் எழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.

கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1-00

ஷை மூன்று மௌலூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1-52

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# முகலாய பெண் மணிகள் சரிதை

(டி. எப். ஆர். மஆலி ஸாஹிப்—பாகவி)

( 2 )

## ஜீனத்துன் னிஸா பேகம்

'ஜீனத் பேகம்' என்று சுருக்கமாய் அழைக்கப்பட்ட இந்த முகலாய இளவரசி, யார் தெரியுமா? முகலாயச் சக்கிரவர்த்திகளில் சிறந்தவரும் மத பக்தரும் நெடுநாள் நீதிமுறை வழுவாது இஸ்லாமிய சம்பிரதாயப்படி அரசாக்ஷி செலுத்தியவருமான ஹஜ்ரத் சுல்தான் அவ்ரங்கஜேப் ஆலம்கீர் அவர்களின் குமாரியே யாவர்.

ஜீனத்துன்னிஸா பேகம், பிரபல இளவரசியாகிய ஜெய்புன்னிஸா பேகமின் சகோதரியே யாவர். இப் பெண்ணரசி பிறந்த காலம் ஹிஜ்ரி 1053-ம் ஆண்டாகும்.

ஜீனத்துன்னிஸா பேகம், தக்க வயதும் ரூப லாவண்யமும் அடைந்து விளங்கினுள். இவளை இவளது தந்தை அவுரங்கஜேப் மன்னர், தமக்கு சமதையான துர்க்கிஸ்தான் தேசாதிபதி அவுரங் ஷாஹ் என்பவருக்கு, மிகவும் ஆடம்பர வைபவத்தோடு நிக்காஹ் முடித்துக் கொடுத்தார்.

## அலங்கார வைபவ உபசாரம்

நிக்காஹ் முடித்துக் கொடுத்த பின், மணப்பெண்ணை மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பிவைக்க நடந்த உபசார வைபவக் காட்சி, டில்லியை ஆண்ட அரசர்களின் சரித்திரத்திலேயே ஒரு விசேஷமாய் விளங்கியது. அன்று நகரமெல்லாம் ஒரு மணப்பெண் போலவே மகா அலங்காரத்துடன் விளங்கியது. கடைகளெல்லாம் நன்கு ஜோடிக்கப்பட்டு வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

தெருவெல்லாம் அலங்கரிக்கப் பட்டிருந்தது. மாப்பிள்ளை, பெண்ணை அழைத்துக் கொண்டு போகும் தெருக்களி லெல்லாம், இரண்டு புறமும், வரிசையாக அழகிய இளம் சிப்பாய்கள் நிற்க வைக்கப் பட்டிருந்தார்கள். அழகிய வாலிபப் பையன்கள், கைகளில் தாம்பாளத் தட்டுகள் ஏந்தி உபசரித்தவண்ணம் நின்று கொண்டிருந்தார்கள். பல சிறுவர்கள், கிண்ணங்களில் அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களை ஏந்தி நின்று கொண்டிருந்தனர். வெளியிலேயே இவ்வளவு ஆடம்பர அலங்காரங்கள் இருந்திருப்பின், அரண்மனை அந்தப்

புரங்களின் உள்ளே, என்னமாதிரி ஆடம்பர அலங்காரங்கள் மிளிர்ந் திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

## புது மாதிரியான சீர் வரிசைகள்

அவுரங்கஜேப் ஆலம்கீர் மன்னர், தம்முடைய கௌரவத்துக்குத் தகுந்த முறையில் மகத்தான விதத்தில் புதுமாதிரியான சீர் வரிசைகள் கொடுத்தார். பச்சை நிற 'யாகூத்' கற்களை பெரும் பேழை நிறைய, தன் மருமகனுக்கு சன்மானம் கொடுத்தார். அதன் மதிப்பு பல லக்ஷம் ரூபாய் மதிப்புடையதாகும்.

மணப் பெண் அமர்ந்து செல்வதற்கான 'டோலி' என்னும் பூப் பல்லக்கானது, கண் கொள்ளாக் காட்சி யுடையதாய், விலை மதிப் பேறப் பெற்றதாய் இருந்தது.

## துருக்கிஸ்தானை ஆண்ட அணங்கு

ஜீனத் பேகம், அழகில் சிறந்ததுபோல், கல்வி, அறிவு, ஆற்ற லிலும் மிகச் சிறந்தவளாய் விளங்கி வந்தாள். இவள் அரபி, பார்ஸி இரு பாஷைகளிலும் பாண்டித்தியமுடைய ஆலிமாகவும் விவேகியாக வும் இருந்தாள்.

குணமும், சுபாவமும், அறிவாற்றலுக்கேற்ப அரிதாய் அமைந் திருந்தன. பொறுமையே பூஷணமாய் விளங்குவாள் ஜீனத் பேகம். ஆனால் வீரத்திலும் கோபத்திலும் மற்ற பெண்ணரசிகளுக்குப் பின் வாங்கியவ ளல்ல.

ஜீனத் பேகம், தன் மணாளனுடைய நாடுபோய் சேர்ந்த பின் அங்கும் பெண்ணரசியாகவே விளங்கினாள். முதலில், தன் கணவ னுடைய ஹிருதயம் என்னும் சிம்மாஸனத்தில் அமர்ந்து, அன்பு என்னும் செங்கோல் பிடித்து அரசை ஆண்டாள். பிறகு புகாரா நாடு, துர்க்கிஸ்தான் நாடு இரண்டுக்கும் அந்தரங்க அதிபதியாய் விளங்கி வந்தாள். அதாவது பெயரளவில்தான் புருஷன் தேசாதிபதி யாக இருந்தானே யல்லாது, உண்மையிலே ஜீனத்துன்னிஸா பேகமே தேசத்தை ஆண்டு வந்தாள். காரணம் யாதெனில், அவள் புருஷன் சுகப் புருஷனாகவும், இராஜ தந்திர மில்லாதவனாகவும் இருந்ததால், மனையாட்டியின் கைப்பாவையாக, பெயரளவில் மன்னனாக இருந்து வந்தான்.

## 'ஜீனத் மஸ்ஜித்'

ஜீனத்துன் னிஸாவின் ஞாபகமாக பழைய டில்லியில் ஒரு மஸ்ஜித் இருந்து வருகிறது. இப்போது அதன் வனப்பும் வர்ணமும் மங்கிப் போயிருந்தாலும், ஆதியில் வனப்பும் வசீகரமும் உடையதாய் இருந்து வந்தது.

இந்த ஜீனத் மஸ்ஜித் தூரப்பார்வைக்கு மகா கம்பீரமானதாய் விளங்குகிறது. இதன் சுவர்க்கற்க ளெல்லாம் ஒருவகை நூதன சிகப்புக் கற்களாலானதாகும். மேல் ஸ்தூபிகள், வெள்ளை நிற 'மர்மர்' கற்களால் அமைக்கப் பட்டதாகும். இதன் 'ஸஹன்' என்னும் முற்ற வெளியின் மத்தியில் 'ஹவுஸ்' என்னும் நீர் நிலை அமைந்திருக்கிறது. இது மிக விஸ்தீரணமான சதுரக் குளமாகும்.

இந்த மஸ்ஜிதின் வடபாரிசத்தில் ஒரு தர்கா போன்ற கல்லறை மண்டபம் இருக்கிறது. அதனுள்தான் ஜீனத்துன் னிஸா பேகம் கல்லடக்கம் செய்யப்பட்டாள். இப்போது, அந்த கல்லறை (தர்கா) சீர் குலைந்துப் போய் கிடக்கிறது. இதுதான் 'பனு'வாகும் உலகத்தின்ரீதி.

## ஜெய்புன் னிஸாவுடன் நற்பழக்கம்.

இந்த ஜீனத்துன் னிஸா பேகம், பிரசித்திப் பெற்ற ஜெய்புன் னிஸா பேகத்தைவிட ஐந்து வயதுச் சிறிய தங்கை. அதாவது ஜீனத் துன்னிஸா, கி. பி. 1643-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ந் தேதி பிறந்தாள். ஜெப்பு ன்னிஸா பேகம் கி. பி. 1638-ம் ஆண்டு பிப்ர வரி மாதம் 10-ந் தேதி பிறந்தாள் என்று சரித்திரக்காரர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

இருவரும், அழகிலும் அறிவிலும் சிறந்தவர்கள். ஆனால் சுபா வத்தில் அக்காள்—தங்கை இரண்டு பேரும் வெவ்வேறான தன்மை யுடையவர்கள். ஜெய்புன்னிஸா சதா கவிதைப் புனைவதிலும், இயற்கை காட்சிகளைக் கண்டு ரசிப்பதிலும், உலக வாழ்வையும் ஆடம் பரங்களையும் வெறுத்துப் பேசுவதிலும் மனப்போக்கு உடையவள்; தங்கை ஜீனத் பேகமோ, சிருங்காரசமும் உலக ஆசாபாசப் பற்றும் உடையவள்.

இருவரும் மதபக்தி ஒழுக்கத்தில் ஒரே மாதிரியாகவே பழக்கப் பட்டனர்; ஒரே மாதிரியாகவே வளர்ந்தனர்; ஆனால் ஒருவள் மண மாகாமலே இறந்தாள்; ஒருவள் மணந்து கொண்டு இன்புற்று வாழ்ந்து மறைந்தாள்.

## அவ்ரங்கஜேபுக்குப் பிரியமான புத்திரி.

முகல் மன்னர் அவ்ரங்கஜேப் ஆலம்கீர், தமது மூத்த குமாரி யான ஜெய்புன்னிஸாவை விட இளைய குமாரியான ஜீனத்துன்னிஸா வையே அதிகப் பிரியமாக நேசித்துப் பாராட்டிவந்தார்.

ஜீனத் பேகம், தினமும் குர்ஆன் ஷரீப் ஓதிப் பாராயணம் செய்வதிலும், தினம் ஐந்து வேளைத் தொழுது வணங்குவதிலும், இஸ்லாமிய பிக்ஹு, தப்ஸீர், ஹதீது முதலிய கிரந்தங்களைப் படித்து ஆராய்ச்சி செய்வதிலும் மிகப் பிரியமுடையவளாய் இருந்து வந்தாள்.

இந்த நற்குண நற்செய்கையானது, வைதிக மன்னரான அவ்ரங்கஜே புக்கு மிகவும் பிடித்தமானதாய் இருந்து வந்தது.

ஜீனத் பேகம்; எப்போதும் தூய்மையான எளிய வெள்ளை உடைகளையே உடுத்துவாள். எல்லோருடனும் முகமலர்ந்து இனிமை யாகப் பேசுவாள். வீட்டு வேலைகளையும் மனம் கோணுது செய்வாள். ஆதலால், அரண்மனையில் வாழும் மற்ற பெண்களெல்லோரும் இவளை மிகவும் நேசித்து சகஜமாகப் பழகிவந்தார்கள்.

## 2-லக்ஷம் ரூபாய் சன்மானம்.

ஹிஜ்ரி 1069-ரம்லான் மாதம் 4-ந்தேதி, புனித நோன்பு நாளில் ஹஜ்ரத் அவ்ரங்கஜேப் மன்னர் ஒரு விழா கொண்டாடினர். அரச சபைப் பிரதானிகளுக்கும், ஏழை எளியோர்களுக்கும் சன்மானங் களும் தான தர்மங்களும் ஏராளமாக வழங்கினர்.

அப்போது, அவ்ரங்கஜேப் மன்னர், தம் அருமைக் குமாரி ஜீனத்துன் னிஸாவுக்கு 2 லக்ஷம் ரூபாய் சன்மானம் அளித்தார். அதைப் பிறகு, அந்த உத்தமி ஜீனத்பேகம், ஒரு நல்ல காரியத்துக்குத் தர்மமாகக் கொடுத்து விட்டாள்.

ஹிஜ்ரி 1111-ல் இஸ்லாம் பூர் சாவ்னி என்ற கட்டிடம் (சத்தி ரச் சாவடி மஹால்) கட்டப்பட்டதே, அதற்கு மேற்படி நிதி வழங்கப் பட்டுச் செலவாயிற்று. இக்கட்டிட வேலைகளை, ஜீனத்துன்னிஸாவே மேற்பார்வை யிட்டு, நிர்வாகம் செய்து கட்டி முடித்தாள் என்று சொல்லப்படுகிறது.

அவ்ரங்காபாதிலுள்ள மஹலும், சில கட்டிடங்களுங் கூட ஜீனத்துன்னிஸாவின் மேற்பார்வை நிர்வாகத்திலேயே கட்டி முடிக்கப் பட்டதாம்.

## தென் இந்திய மராட்டிய யுத்தகால சேவை

தென் இந்திய மராட்டிய (ஹிந்து) ஜாதியாருடன் முகலாய மா மன்னர் அவுரங்கஜேப், தொடர்ந்து 18 வருஷ காலம் சண்டை போட வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டது. பன்முறை அவர் தக்ஷிண (தெற்குப்) பிரதேசங்களுக்கு படைகளை அனுப்பி வைத்து, புரட்சிக்கார கோஷ்டிகளை அடக்கியாள வேண்டி யிருந்தது. அப் படிப்பட்ட எதிர்ப்பாளர் (விரோதி) களில் வீர சிவாஜியின் பெயர் குறிப்பிடத் தக்கதாகும்.

ஒரு முறை அவுரங்கஜேபுக்கு அஹ்மத் நகரில் படை யெடுத்துத் தாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது எதிர்பாரா வண்ணம் மன்னர் அவுரங்கஜேபின் உடல்நலம் கெட்டுப் போய் விட் டது. அது சமயம் ஜீனத்துன்னிஸா பேகமே, தன் தந்தைக்குப்

பணிவிடை செய்து, கஷ்டங்களைப் போக்கி வைத்தாள். அது மட்டுமல்ல, தகப்பனருக்குப் பதிலாய் படை யனுப்புதல் முதலிய அரசாங்க விவகாரங்களையும் ஓரளவு கவனித்து வந்தாள்.

## அவுரங்கஜேப் மரணம்

ஹிஜ்ரி 1018-ம் ஆண்டு துல்ஹஜ்ஜு மாதம் 28-ம் பிறை (கி. பி. 1707-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 20-ம் தேதி) முகலாய மா மன்னர் சுல்தான் அவுரங்கஜேப் ஆலம்கிர் இறந்து போனர். அப்போது, ஜீனத் பேகமும், ஜெய்புன்னிஸாவும் அருகில் இருந்தனர்.

தந்தையின் மரணத்தினல் ஜெய்புன்னிஸா மிகவும் துக்கப் பட்டு, கவலையால் வாடி வதங்கினள். அவளுடைய உடன் பிறந்த சகோதரன் ஆஜம்ஷாஹ், அஹ்மத் நகரிலிருந்து 40-வது மைலில் வெகு தூரத்தில், படையிறக்கி போர்க்களத்தில் இருந்தான். ஆங்கு தந்தையின் மரணச் செய்தி கேள்விப்பட்டு, ஓடோடியும் வந்து இரு தங்கைகளுக்கும் ஆறுதல் கூறி மனதைத் தேற்றினன்.

அப்போது அவுரங்கஜேப்புக்கு (1) முஅஜம் ஷாஹ், (2) ஆஜம் ஷாஹ், (3) காம்பக்ஷ் ஷாஹ் என்று மூன்று புதல்வர்கள் இருந்தனர். ஆஜம் ஷாஹ் தோல்பூர், ஆக்ரா போராட்டங்களில் கொல்லப் பட்டார். இதனுலும் ஜீனத் பேகமுக்கு மனக் கவலை அதிகமாயிற்று.

## முஅஜம் ஷாவுக்குப் பட்டம்!

ஆஜம் ஷாவும், முஅஜம் ஷாவும் 'பட்டத்துக்கு நானே வரு வேன்' என்று போட்டி போட்டுக் கொண்டனர். இருவரும் படை களைத் திரட்டி போரிடவும் தயாராயினர். அப்போதுதான் ஆஜம் ஷாஹ் கொல்லப்பட்டு போனது.

அதன் பின், முஅஜம் ஷாஹ் எதிர்ப்பு இல்லாமல் பட்டத்துக்கு தானே அதிபதியாக அமர்ந்து கொண்டான். இந்த அரசுரிமை-பட்ட மேற்பை ஜீனத்துன்னிஸா பேகம் ஆதரிக்கவில்லை. எனவே ஜீனத் பேகம், உபகாரச் சம்பளத்துடன் வேறு இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டாள்.

பிறகு காம்பக்ஷ் ஷாவும் கொல்லப் பட்டான். முஅஜம் ஷாவுக்கு எதிர்ப்பே இல்லை.

இறுதியாக, ஆலம்கிரின் வீரப்புத்திரியான ஜீனத்துன்னிஸா பேகம், பல சோதனைகளுக்கும் கஷ்டங்களுக்கும் பிறகு, ஹிஜ்ரீ 1133-ம் ஆண்டு ரஜப் மாதம் 22-ந் தேதி, தமது 80-வது வயதில் இறந்துபோய் கல்லடக்கம் செய்யப்பட்டாள்.

# இணையிலா துணைவர்

(கும்மிடிபூண்டி - பி. டி. ஷாஹுல் ஹமீது)

சினிமா படம்: தேவதாஸ். இசை: உரவுமில்லை பகையுமில்லை

சொத்துமில்லை சுகமுமில்லை சொக்சமும்மில்லை
இருதிநாளில் இறைவன்முன்னில் நிற்கும்மன்னிலையில் —
உம்மையல்லால் எமக்குவேறே துணையேதும்மில்லை
வேருகதிதானென்றில்லை (சொ)

(1) உலகம்வுய்ய வுதித்தவேந்தே வாழ்கநின்னுமம்
அலகில்லாத பட்சிப்போன்று அல்லலிலுற்ற
அகிலமாந்தர் தம்மைகார்க்கும் அண்ணலே நபியே
யாமுஹம்மதேமணியே (சொ)

(2) இணையில்லாத ஏகன்சமுகம் திரண்டிடும் உயிர்கள்
அனைவ்வோர்நபிகள் அவரவர்தம் நபுலைகார்த்திடுங்கால்
அண்ணலேநீர் உம்மத்திற்காய் அலைபாய்ந்துருகுவீர்
ஆதரவும் மிகத்தருவீர் (சொ)

(3) பேதமையால் பூதலத்தோர் புரியும்பலபிழைகள்
பொருத்து இறைவன்ருஹத்தருள இரைந்திடுங்காலை
புகிதருங்கள் ஷபாஅத்தாலே பொல்லாங்ககன்றிடுமே
மெய்வழியும் துலங்கிடுமே (சொ)

(4) இணையில்லாத துணைவரேயெம் ஏந்தலேநபியே
கணைகள்தொடுக்கும் வய்யமாய்கை வலையில் வீழாமல்
கார்த்துரட்சித்தாதரிப்பீர் கருணையங்கடலே
யெம்காஸீம் ரஸூல் நபியே (சொ)

(5) நாளைவருகும் மஹ்ஷர்வேளை கலமுண்டாகிடவே
நாடும்நாங்கள் ஈமானுறுதிபெற்று இன்புறவே
கலஹ்தீரய்ந்தீந்து நாளும்காரும் நபியே யெம்பீரே
மெய்யொளிவே தவசீரே (சொ)

18766

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமைப் புதல்வியாகிய

# பாத்திமா நாயகி (ரலி) ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரத்தில் ஹஜ்றத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் மூஃமினீன் கதிஜா நாயகி அவர்களின் வம்ச பரம்பரையும், அவர்களின் பிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும், பால்யகால அறிவும், பரஸ்பர அன்பும், நாயகியின் திருக்கல்யாணமும், அவர் தம் வீட்டில் குடித்தனம் நடத்தி வந்த ஒழுங்கும், தமது பர்த்தாவாகிய அலியாருக்கு இணங்கி நடந்த அழகும், அவர்களின் தயாள சிந்தையும், உழைப்பும் ஆண்டவன் மீது பக்தியும், வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், ரஸுலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின்பால் இருந்துவந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையில்பால் இருந்து வந்த பிரியமும் அவர்களின் நாணம், அடக்கம், அச்சம் முதலிய ஒழுக்கங்களும், இமாம் ஹஸன் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகியின் வபாத்தும் விபரமாய்க் கூறப்பட்டிருப்பதுடன் இந்நாயகியின் ஜீவிய சரித்திரத்தில் நம் சகோதர சகோதரிகளுக்கு அரிய போதனைகளும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு முஸ்லிமும் இச்சரிதையை வாசித்துணர வேண்டியது மிக்க அவசியமாகும். கிளேஸ் காகிதம். விலை ரூ. 1–60

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 3–00

---

கிடைக்குமிடம :—

**ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# இஹ்யா உலூமுத்தீன் மொழி பெயர்ப்பு

புதிய இரண்டாம் பதிப்பு

(தமிழ்)

இஸ்லாமிய சன்மார்க்க ஞானப் பொக்கிஷமாய் விளங்குவது இமாமுல் மஃரிபத் வத்தரீகத் ஹஜ்றத் இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அரபு பாஷையில் இயற்றிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் பாரதூரமான கிரந்தம். அது மௌலவி ஆலிம்களுக்கு மதரஸாக்களில் கற்பிக்கப் படுத்துவது யாவரும் அறிந்த விஷயம். அந்த அற்புதமும் மகிமையும் வாய்ந்த இஸ்லாமிய ஞானமார்க்க நூலின் மொழி பெயர்ப்பே இந்த இஹ்யா உலூமுத்தீன் ஆகும். அரபு உர்து தெரியாத தமிழ் முஸ்லிம்களும், இஸ்லாமிய அனுஷ்டானத் தத்துவ ஞானங்களையும், இக்கித்தாபின் வாயிலாய் ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். இதில் ஷரீஅத், தரீகத், மஃரிபத், ஹகிகத் என்னும் நான்குவித மார்க்கங்களும் விளக்கப்பட்டிருக்கிறது. ஈமான், இஸ்லாம், அகிதா, ஹதீஸ், தலீல் முதலிய ஆதாரங்களோடு, இஸ்லாம் மதானுஷ்ட சட்டதிட்ட பர்ளு, ஸுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம் முதலிய மஸ்அலாக்க ளெல்லாம் இந்நூலின் கண், மிகத் துலாம்பரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் பெருமை எழுதிச் சொல்லித் தெரியக் கூடியதில்லை. இந்த நூலினைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரியவரும்.,

நெடு நாட்களுக்குப் பிறகு இந்நூல் அச்சாயிருப்பதால் பிரதிகளுக்கு ஆர்டர் தர முந்திக் கொள்ளுங்கள்.

இதன் விலை ரூ. 5-00

கிடைக்குமிடம் :—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.